# 2017

# ஆண்டறிக்கை

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

18-03-2019

மாண்புமிகு மலிக் சமரவிக்ரம
அபிவிருத்தி உபாய முறைகள மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு,
30 ஆம் மாடி, மேற்குக் கோபுரம்,
உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.

மதிப்பிற்குரிய ஐயா

**<u>கணக்கியல் கூற்று மற்றும் ஆண்டறிக்கை– 2017</u>**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (2) இற்கு அமைவாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை பின்வரும் ஆவணங்களுடன் இணைத்து, இயக்குனர்கள் சபை சார்பாக சமர்பிப்பதில் நான் மகிழ்வடைகிறேன்.

- தலைவர் அறிக்கை
- கணக்கியல் கூற்று
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

தங்கள் உண்மையுள்ள,

இந்திரா மல்வத்த
தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

## சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் - 2017

| | | |
|---|---|---|
| தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி | - | திருமதி. இந்திரா மல்வத்த |
| பணிப்பாளர் நாயகம் | - | திருமதி. ஜே. சிறிவர்தன |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் - நிதி மற்றும் நிர்வாகம் | - | செல்வி ஆர்.எம்.பீ. ஹேவாலியனகே (மார்ச் 2017 வரைக்கும்) |
| | - | திருமதி. பீ.கே. சுமித்திராஆரச்சி (03.04.2017 இல் இருந்து) |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் - அபிவிருத்தி | - | திரு. டீ. ஜெயவர்தன (03.04.2017 இல் இருந்து) |
| நிதிப் பிரிவு | - | திருமதி. பீ.கே. சுமித்திராஆரச்சி (02.04.2017 வரைக்கும) |
| | - | செல்வி ஜீ.எம். ஹேரத் (16.10.2017 இல் இருந்து) |
| மனிதவள அபிவிருத்திப் பிரிவு | - | திரு. கே.கே.ஆர் கன்னங்கரா (பணிப்பாளர்) |
| வியாபார வசதிப்படுத்தல் மற்றும் வியாபார தகவல் பிரிவு | - | திரு. எஸ்.ஆர்.பீ. இந்திரகீர்த்தி (பணிப்பாளர்) |
| தகவல் தொழிநுட்பப் பிரிவு | - | திருமதி ஐ.சீ. அழகப்பெரும (பணிப்பாளர்) |
| ஏற்றுமதி விவசாயப் பிரிவு | - | திருமதி. பீ.வீ.ஏ.எம். பத்தேகமகே (பணிப்பாளர்) |
| பிராந்திய அபிவிருத்திப் பிரிவு | - | திரு. ரீ.டீ. அதபத்து (பணிப்பாளர்) (31.03.2017 வரைக்கும்) |
| | - | திரு. கே.ஆர்.எம்.பீ. பெர்னாண்டோ (பதில்ப் பணிப்பாளர்) (01.06.2017 இல் இருந்து) |
| மூலோபாய திட்டமிடல் மற்றும் கொள்கைப் பிரிவு | - | திருமதி யு.கே.டீ. வெகப்பிட்டிய (பணிப்பாளர்) |
| கைத்தொழில் உற்பத்திகள் பிரிவு | - | செல்வி. சீ. திசாநாயக்க (பணிப்பாளர்) |
| ஏற்றுமதி சேவைகள் பிரிவு | - | திரு. எம்.கே.எஸ். கே. மெல்டெனி(பணிப்பாளர்) |
| சந்தைப்படுத்தல் அபிவிருத்தி பிரிவு | - | திருமதி. கே.ஏ.வீ. பிரேமதிலக்க (பணிப்பாளர்) |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | - | திருமதி. நில்மினி றணசிங்க(உள்ளகக் கணக்காய்வாளர்) |
| சட்டப் பிரிவு | - | திருமதி. டீ.ரீ. விஜயரத்ன (சட்ட உத்தியோகத்தர்) |
| கணக்காய்வாளர் | - | கணக்காய்வாளர் நாயகம் |
| வங்கியாளர்கள் | - | இலங்கை வங்கி |
| | - | சம்பத் வங்கி |
| | - | தேசிய அபிவிருத்தி வங்கி |

**<u>பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்</u>**
இல.42, நவம் மாவத்தை,
கொழும்பு 02.

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
## இயக்குனர்கள் சபை– 2017

| | | |
|---|---|---|
| 01. | திருமதி. இந்திரா மல்வத்த | - தலைவர் |
| 02. | திரு. பந்துல எகொடகே | - பணிப்பாளர் |
| 03. | திரு. சனத் டி சில்வா | - பணிப்பாளர் |
| 04. | திரு. எம்.ஜே.எவ். காசிம் | - பணிப்பாளர் |
| 05. | திரு. றொஹான் அபயகோன் | - பணிப்பாளர் |
| 06. | திரு. சினன் சலாஹுடீன் | - பணிப்பாளர் |
| 07. | கலாநிதி யுசுப் கே. மரிக்கார் | - பணிப்பாளர் |
| 08. | திரு. எல்.பீ. ஜயம்பதி | - செயலாளர்<br>துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு |
| 09. | திருமதி.<br>டப்ல்யு.எம்.எம்.ஆர்.அதிகாரி | - செயலாளர்<br>கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு<br>(நவம்பர் 2017 வரைக்கும்) |
| 10. | திரு. எம்.ஐ.எம். றபீக் | - செயலாளர்<br>தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு<br>(ஜீலை 2017 வரைக்கும்) |
| 11. | திரு. யு.ஜீ. ரத்னஸிரி | - மேலதிக செயலாளர் (பொருளாதார விவகாரம்)<br>தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு<br>(நவம்பர 2017 இல் இருந்து) |
| 12. | திரு. டீ.வீ. பண்டுளசேன | - செயலாளர்<br>விவசாய இராஜாங்க அமைச்சு |
| 13. | திருமதி. கிறேஸ் ஆசீர்வாதம் | - இராஜாங்க செயலாளர்<br>வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு<br>(நவம்பர் 2017 வரைக்கும்) |
| 14. | திரு. யு.கே.எஸ். மிகுந்துகுலசூரிய | - மேலதிக செயலாளர்<br>பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br>(பெப்ரவரி 2017 வரைக்கும்) |
| 15. | செல்வி. அஞ்சலி தேவராஜா | - மேலதிக செயலாளர்<br>ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு<br>(மார்ச் 2017 வரைக்கும) |
| 16. | பொறியிளாலர் பண்டுள<br>விக்ரமஆரச்சி | - செயலாளர்<br>ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு<br>(செப்டம்பர் 2017 இல் இருந்து) |

17. திரு. டபல்யு.ஏ.டி.எஸ். குணசிங்ஹ - மேலதிக செயலாளர்
அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு (மே 2017 இல் இருந்து)

18. திரு. எஸ். சேனாநாயக்க - மேலதிக செயலாளர் (திட்டமிடலும் அபிவிருத்தியும்)
கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு

19. திருமதி. செய்தா சேனாரத்ன - மேலதிக செயலாளர்
கைத்தொழில் மற்றும் வணிக் அமைச்சு

20. திரு.பீ.எச்.ஏ.எஸ். விஜேயரத்ன - மேலதிக பணிப்பாளர் நாயகம்
பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்
நிதி அமைச்சு

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 67 |
| 2. | 2017 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி செயல்திறன் | 68-93 |
| 3. | நிதி நிலைக் கூற்று | 94 |
| 4. | விரிவான வருமானக் கூற்று | 95 |
| 5. | சமநிலை மாற்றக் கூற்று | 96 |
| 6. | காசுப் பாய்ச்சல்க் கூற்று | 97 |
| 7. | கணக்கியல் குறிப்புக்கள் | 98-107 |
| 8. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 108-127 |

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## அறிமுகம்

ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்கான முதன் நிலை நிறுவனமாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை காணப்படுகின்றது. 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கீழ் 1979 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தேசிய ஏற்றுமதி இலக்குகளை அமுல்படுத்துவதில் அதன் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் கொள்கை ஆலோசகராக, கண்காணிப்பாளராக, மேம்படுத்துனராக, வசதியளிப்போராக மற்றும் அறிவு வழங்குனராக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதன் பணிகளை மேற்கொள்கின்றது.

### செயற்பணி

''புத்தாக்கு உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான முதன்நிலை ஏற்றுமதி கேந்திர நிலையமாக இலங்கையை நிலைபெறச் செய்தல்'' என்ற ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் செயற்பணியானது அரசின் அபிவிருத்தி தூரநோக்கு மற்றும் தேசிய ஏற்றுமதி உபாயத்தின் தூரநோக்கு உடன் ஒருங்கிணைந்துள்ளது.

### தூரநோக்கு

''புத்தாக்கம், தொழில் முயற்சியாண்மை மற்றும் பூகோள ஒருங்கிணைப்பு'' ஊடாக ஏற்றுமதி போட்டித்தன்மையை இயலச் செய்தல்'' ஆகிய ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தூரநோக்கானது அதிகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று உழைப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதுடன் அதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பைச் செய்தல்.

### 2020 வரை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கேபிஐ கள்

அ) ஐ.அ.டொ. 22 பில்லியன்கள் வரை ஏற்றுமதிசெய்வதுடன் அதிகரிப்பு அத்தோடு மொ.தே.உ. க்கு 2020 அளவில் 20 சதவீதம் பங்களிப்புச் செய்தல்.

ஆ) கற்ற மற்றும் திறன் உள்ள இளைஞர்களுக்கு 100,000 தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்.

இ) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உதவியுடன் 20 நிலைபெறச் செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களின் ஏற்றுமதி புரள்வை அதிகரிப்பதற்கு வசதியளிப்புச் செய்தல்.

ஈ) ஏற்றமதி வியாபாரத்திற்காக 2,000 உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவி புரிதல்.

உ) பூகோள பெறுமதிச் சங்கிலிகளுக்கும் மற்றும் பூகோள உற்பத்தி வலையமைப்புக்களுக்கும் புதிய 4 -5 பொருட்களை அறிமுகம் செய்தல்

**2017 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதி செயலாற்றுகை**




2016 ஆம் ஆண்டின் ஐ.அ.டொ. 13.7 பில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது, 2017 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 15 பில்லியன்கள் என்ற மைல்கல்லை அடைந்துள்ளதுடன் பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான இலங்கையின் வெளிநாட்டு செலாவாணி உழைப்பு 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது 2017 ஆம் ஆண்டில் ஏற்றுமதியில் குறிப்பிடத்தகு அதிகரப்பொன்றை பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டின் ஐ.அ.டொ. 10.3 பில்லியன் தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது 2017 ஆம் ஆண்டுக்கு ஐ.அ.டொ. 11.4 பில்லியன்களை வர்த்தக ஏற்றுமதி உழைப்புக்கள் பதிவு செய்துள்ளன. மீளாய்வு வருடத்தின் போது ஐ.அ.டொ. 3.7 பில்லியன்களை அடைந்து கொள்வதில் 8.1 சதவீத முழு மொத்த வளர்ச்சியை த.தொ.தொ. / பீபி.எம், நிர்மாணத்துறை, நிதிச் சேவைகள் மற்றும வசதியளிப்புச் சேவைகள் மதிப்பீடு செய்துள்ளன.

மேலும், 2017 ஆம் ஆண்டில், முதன் முறையாக மார்ச் (ஐ.அ.டொ. 1,036 மில்), யூன் (ஐ.அ.டொ. 1, 167 மில்லியன்கள்), செத்தெம்பர் (ஐ.அ.டொ. 1,012 மில்லியன்கள் மற்றும் திசம்பர் (ஐ.அ.டொ. 1,012 மில்லியன்கள்) மாதங்களில் மாதாந்தம் ஐ.அ.டொ. 1 பில்லியனுக்கும் அதிகமான வர்த்தக ஏற்றுமதி உழைப்புக்களை பதிவு செய்திருந்தது. 2018 ஆம் ஆண்டுக்காக ஐ.அ.டொ. 16.6 பில்லியன்கள் அடைவதில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை வர்த்தக மற்றும் சேவைகள் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தகு வளர்ச்சியை எதிர்பார்க்கின்றது.




பண்ட ஏற்றுமதிகளில், விவசாய ஏற்றுமதிகள் 17.61 சதவீத வளர்ச்சியை கொண்டுள்ளது, இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த ஐரோப்பிய சங்கத்தின் மீன் இறக்குமதித் தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து மீன் பிடித்துறை 40.24 சதவீத அதிக உயர்வான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது, அத்தோடு கைத்தொழில் துறை ஏற்றுமதிகள் 7.46 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. புதிய தேசிய ஏற்றுமதி உபாயத்தின் கீழ் அடையாளங் காணப்பட்ட “ முன்னுரிமை துறைகளில்” உறுதியான செயலாற்றுகை சான்றாக உள்ளன குறிப்பாக, இலத்திரனியல் மற்றும் மின்னியல் துறைகள் 16.9 மற்றும் துண்டுகள் 29 சதவீதம் என்ற வகையில் வளர்ச்சியடைந்து வருவதுடன் வள்ளம் கட்டல் 50 சதவீத்தினால் வளர்ச்சியடைந்து வருகின்றது. எவ்வாறாயினும், உணவு மற்றும் குடிபான ஏற்றுமதிகள் 9.14 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவு செய்துள்ளது.

12 சதவீத வரிச் சலுகையான ஜீஎஸ்பி+ (பிலஸ்) இன் காரணமாக ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்தான புதிய கட்டளைகள் கிடைக்கப் பெற்றமையின் காரணமாக 2017 ஆண்டின் போது 3.06 சதவீத ஏற்றுதி வளர்ச்சியை பதிவு செய்துள்ள அதே வேளை ஆடைத் துறை 44 சதவீத ஏற்றுமதியைக் கொண்டுள்ளது. அதே வேளை, ஆடைத் தொழில் துறையினர்களுக்கு 2018 ஆம் ஆண்டு உறுதியானதொரு ஆண்டாக காணப்படுகின்றது. தேயிலை மற்றும் இறப்பர் ஆகிய முடிவுப் பொருட்கள் ஏற்றுமதி 13 சதவீதம் மற்றும் 8 சதவீதம் என்ற வகையில் கொண்டிருப்பதுடன் இத் துறைகள் 20.78 மற்றும் 8.71 சதவீதம் என்ற வகையில் கனிசமான அளவு வளர்ச்சியை பதிவு செய்துள்ளன.

ஏற்றுமதித் துறை என்ற வகையில், ஐரோப்பியச் சங்கத்திற்கான ஏற்றுமதி உழைப்புக்கள் 6.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஐக்கிய அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகள் 3.65 சதவீதமாக அதிகரித்துள்ளது. தென் ஆசிய நாடுகளுக்கான ஏற்றுமதி கனிசமான அளவு வளர்ச்சியடைந்துள்ளதுடன் இது 20.88 சதவீதமாக இருப்பதுடன் ஐ.அ.டொ. 996 மில்லியன்கள் எல்லையை அடைந்துள்ளது ( 2016 ஆம் ஆண்டின் ஐ.அ.டொ. 824 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது). விசேடமாக, இந்தியாவுக்கான ஏற்றுமதிகள் உறுதியான செயலாற்றுகையைக் காட்டுவதுடன், 2016 ஆம் ஆண்டின் ஐ.அ.டொ. 551 மில்லியன்களிலிருந்து 2017 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 689 மில்லியன்கள் வரை அதிகரித்துள்ளது. அதே வேளை, ஐக்கிய இராச்சியத்திற்கான

ஏற்றுமதிகள் 0.91 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் இதற்கான காரணம் ஜீபிபி (GBP) இன் விலைக் கழிவு மற்றும் பிரேக்சிட் (Brexit) இன் காரணமான வாடிக்கையாளர் சந்தை நிச்சியமற்ற தன்மையும் ஆகும்.







## சனாதிபதி ஏற்றுமதி விருதுகள்

பல அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பங்குபற்றலுடன் கொழும்பு, பண்டாறநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கையின் அதி மேதகு சனாதிபதியின் தலைமையின் கீழ் 2017 செப்தெம்பர் 14 ஆம் திகதி 21 ஆவது சனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வைபம் நடைபெற்றது. நாட்டிற்கான ஏற்றுமதி முயற்சி தொடர்பில் ஏற்றுமதியாளர்கள் செய்கின்ற பங்களிப்பு தொடர்பில் வழங்கப்படுகின்ற அதி உயர் விருதாக சனாதிபதி ஏற்றுமதி விருதுகள் காணப்படுகின்றன.

அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர், வர்த்தகத் திணைக்களம் மற்றும் வர்த்தக சம்மேளனங்கள் அநாவது சிலோன் வர்த்தக சம்மேளனம், ஏற்றுமதியாளர்களின் தேசிய சம்மேளனம், இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் ஒன்றியம் ஆகிய வற்றின் அங்கத்தவர்கள் உள்ளடங்கியதும் உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியொருவரின் தலைமையில் 7 அங்கத்தவர்களைக் கொண்ட முன்னணி குழுவொன்றினால் விருதுகளுக்கான தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் ஏற்றுதியாளர்களின் அதி உன்னத செயலாற்றுகை தொடர்பாக இந்த நிகழ்வின் போது ஏற்றுமதியாளர்களுக்கு முழு மொத்த விருதுகள் 11 மற்றும் துறைசார் விருதுகள் 48 (உயர் வெளிநாட்டு செலாவாணி உழைப்புக்கள் தொடர்பாக 14 விருதுகள் மற்றும் உயர் பெறுமதி சேர்ப்புக்கள் தொடர்பாக 34 விருதுகள்) உள்ளடங்கலாக மொத்தமாக 59 விருதுகள் வழங்கப்பட்டன. நாட்டின் ஏற்றுமதி அபிவிருத்தி நோக்கிய தங்களுடைய முயற்சிகளுக்கான தேசிய அங்கிகாரமாக இது காணப்படுகின்றது. விருதுகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அதிஉயர் கிண்ணமொன்றும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

விருதுகளை வென்றவர்கள் தங்களுடைய சந்தைப்படுத்தல் கருவியாக 3 வருடங்களுக்கு இந்த விருதுச் சின்னத்தை பயன்படுத்துவதற்கான வரப்பிரசாதத்தை பெற்றுள்ளனர்.

விருதொன்று தொடர்பாக போட்டியிடும் பொருட்டு பாரிய மற்றும் சிறிய ஆகிய இருவகையான சகல ஏற்றுமதி தொழில் முயற்சியாளர்களுக்கும் வாய்ப்பொன்று வழங்கி பல் நோக்கு பிரமாணங்கள் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் தெரிவுகளுக்கான அடிப்படை அமைந்தது. ஏற்றுமதித் துறையின் அபிவிருத்திக்கு மிக முக்கியமாக இருக்கின்ற பல்வேறுபட்ட கோணங்களின் கீழ் வழங்கப்பட்ட பங்களிப்பின் அடிப்படையில் முழு மொத்த (விசேட) விருதுகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்பட்டன.

ஏற்றுமதி நோக்கம் கருதிய விநியோகம் தொடர்பாக பிராந்திய மட்டத்தில் கைக்தொழில் மற்றும் பொருளாதார வலயங்களை உருவாக்குதல், நிலைத்த தன்மையில் ஏற்றுமதிச் சந்தைகளின் பல்வகைமை, இலங்கையின் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதி வியாபாரக் குறிகளின் பெறுமதி, தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், நிலைத்த தன்மையின் முக்கியத்துவம் மற்றும் தேறிய வெளிநாட்டுச் செலவாணி உழைப்பின் அதிகரிப்பதில் இந்த குறிக்கோள்கள் உள்ளடங்குகின்றன. சிறந்த முன்னேறிவரும் ஏற்றுமதியாளர் விருதினை வழங்குவதன் ஊடாக ஏற்றுமதி அபிவிருத்திக்கான சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சிகளின் பங்களிப்பினை அங்கிகரித்தல். மேலும், சிறந்த பெண் ஏற்றுமதியாளர் விருதை வழங்குவதன் ஊடாக ஏற்றுமதி வியாபாரத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களின் பங்குபற்றல் அங்கிகரிக்கப்பட்டுள்ளது, மேலம், சிறந்த பொதியிடல் சேவை தொடர்பாக ஏற்றுமதித் துறையில் அங்கிகரிக்கப்பட்டது.






டில்மா குழுவின் தலைவரும் ஸ்தாபருமானவர் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் வியாபாரக் குறியிடலின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளித்து பிரதான உரையை நிகழ்த்தினார். வெளிநாட்டுப் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், வர்த்தகச் சம்மேளனங்கள், உற்பத்தி அமைப்புக்கள் மற்றும் தனியார் துறை தொழில்முயற்சிகள் இருந்தான பிரதிநிதிகளைக் கொண்ட பங்குபற்றுனர்களுக்கு அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்த அமைச்சர் மற்றும் சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் மற்றும் அதிமேதகு சனாதிபதி போன்றோர் அந் நிகழ்வில் உரையாற்றினார்கள்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி விசேட விருதுகளை வழங்கினார் அத்தோடு துறைசார் விருதுகள் உரிய அமைச்சர்களினால் வழங்கப்பட்டன.

**முழுமையான (விசேட) விருதுகளை வென்றவர்கள்**

| | விருது பற்றிய விபரம் | வெற்றியாளர் |
|---|---|---|
| 1 | சிறந்த முன்னேற்ற ஏற்றுமதியாளர் | வைல்ட் லங்கா ஓர்கனிக்ஸ் |
| 2 | ஏற்றுமதி விநியோக சங்கிலியிற்கு பிராந்தியத்தில் உயர் பங்களிப்பாளர் | எச்ஜேஎஸ் கொன்டிமென்ட் லிமிடட் |
| 3 | ஆண்டுக்கான சிறந்த பெண் ஏற்றுமதியாளர் | ரெடிவெயார் (தனியார்) லிமிடட் |
| 4 | ஏற்றுமதிக் கைத்தொழில் துறையில் கூடிய தொழில்வாய்ப்பு வழங்குனர் | பிரேன்டிக்ஸ் எபரல் லிமிடட் |
| 5 | நிலைபெறுதகு அபிவிருத்தியின் சிறப்புக்கள் | பிரேன்டிக்ஸ் எபரல் லிமிடட் |

| | | |
|---|---|---|
| **6** | ஏற்றுமதித் துறைக்கான சிறந்த பொதியிடல் சேவை வழங்குனர் | ஸ்டார் பெகெஜிங் (பிரைவட்) லிமிடட் |
| **7** | ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள சிறந்த பல்தேசியக் கம்பனி (MNC) | கெஸ்மோ லோட்ஸ்டார் (பிரைவட்) லிமிடட் |
| **8** | அதி கூடிய சந்தை பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதியாளர் | கெஸ்மோ லோட்ஸ்டார் (பிரைவட்) லிமிடட் |
| **9** | இலங்கையின் சிறந்த ஏற்றுமதி வியாபரக் குறி | அக்பர் பிரதேர்ஸ் (பிரைவட்) லிமிடட் |
| **10** | உயர் நிகர வெளிநாட்டுச் செலாவாணி உழைப்பாளர் | பிரேன்டிக்ஸ் எபரல் லிமிடட் |
| **11** | ஆண்டுக்கான இலங்கையின் ஏற்றுமதியாளர் | பிரேன்டிக்ஸ் எபரல் லிமிடட் |

**01. கொள்கை முன்னெடுப்புக்கள்**

**இலங்கைக்கான தேசிய ஏற்றுமதி உபாயங்கள்**

2017 ஆம் ஆண்டின் போது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் பாரிய கொள்கை மட்ட செயற்பாடுகளாக ஜெனிவா, சர்வதேச வர்த்தக நிலையத்தின் உதவியுடன் தேசிய ஏற்றுமதி உபாயங்களை உருவாக்குதல் ஆகும்.

2016, ஒக்டோபர் 27 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கௌரவ பிரதம அமைச்சர் பொருளாதார கொள்கை கூற்றின் ஊடாக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட உரையில், இலங்கையின் வரத்தக பற்றாக்குறைகளை குறைத்தல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் வருமானத்தை அதிகரித்தலை இலக்காகக் கொண்ட ஏற்றுமதி அபிவிருத்தியில் தேவையான வர்த்தக மறுசீரமைப்புக்களை அறிமுகம் செய்தல், புத்தாக்கங்களை அதிகரித்து பல்வகைப்படுத்தல் நோக்கத்திற்கு புதிய உபாயங்கள் தேவைப்படுகின்றது என முக்கியத்துவம் வழங்கியிருந்தார்.

இலங்கைக்கான தேசிய ஏற்றுமதி உபாயம் ஆனது அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் தொடர்புடைய பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தகச் சம்மேளனங்களினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. தேசிய ஏற்றுமதி உபாய செயன்முறையின் இயக்குனராக சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் இருக்கின்றார். மேலும், இந்தச் செயற்பாட்டுக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் வழிகாட்டல்களை வழங்குவதற்காகவுமாக சிரேட்ட பொது மற்றும் தனியார் துறை அலுவலர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் தேசிய ஆலோசகர் உள்ளடங்கலான இணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக ஆய்வுகள், பெறுமதி சங்கிலி செயலாற்றுகை, சந்தை தெளிவுபடுத்தல்கள், உபாயத்திட்ட பிரச்சினைகள் மற்றும் பயிற்சி விளக்கங்களை உறுதிப்படுத்துவதற்கு தேசிய, பிராந்திய மற்றும் துறைசார் பிரத்தியேக அரச மற்றும் தனியார் அக்கறை காட்டுனர்களிடம் ஆலோசனை பெறப்பட்டது. தேசிய ஏற்றுமதி உபாய வடிவமைப்புச் செயன்முறை கட்டியமைக்கப்படவுள்ளதுடன் பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்புக்களுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் இணைப்புக்களை ஏற்படுத்துவதற்காக உரிய நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படுவதுடன் முன்னுரிமை துறைகளை நிறைவேற்றுவதற்கும் வசதியளிப்புச் செய்யப்படுகின்றது.

நாட்டின் அடுத்த ஏற்றுமதி வளர்ச்சி சுழற்சியைத் திட்டமிடுவதற்காக அரச மற்றும் தனியார் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 150 பேரின் பங்குபற்றலுடன் இலங்கையின் தேசிய ஏற்றுமதி உபாயத்திற்கான முதலாவது தேசிய மாநாடு நடைபெற்றது. ஐரோப்பியச் சங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட ‘‘ஈ.யு. - இலங்கை

வர்த்தகத்துடன் தொடர்புடைய உதவிகள்" செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச வர்த்தக நிலையத்தால் தேசிய ஏற்றுமதி உபாயங்களின் அபிவிருத்திக்கு தொழில்நுட்ப உதவிகள் விரிவுபடுத்தப்பட்டது.





முதலாவது தேசிய ஏற்றுமதி உபாய ஆலோசனையின் போது (ஏப்ரல் 2017), இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சிக்கான உபாயவழி நோக்கொன்று புத்தாக்கங்கள் மற்றும் முதலீடுகளினால் ஏற்றுமதி மத்திய நெறிப்படுத்தல் வழிப்படுத்தப்படுதல் தொடர்பில் உடன்பட்டது. முழுமையான தேசிய ஏற்றுமதி உபாய வடிவமைப்புச் செயன்முறைக்கு நான்கு பிரதான உபாய நோக்கங்கள் வழிவகை செய்வதுடன் பங்குபற்றுனர்களினால் இந்த நோக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

- ஏற்றுமதித் துறைக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற ஊகிக்கக் கூடிய மற்றும் வெளிப்படைத் தன்மையான கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை வேலைச் சட்டகத்துடனான வியாபாரமொன்றைக் கொண்டிருத்தல்.
- புத்தாக்கத்தின் ஊடாகவும் மற்றும் முன்னேறிவரும் ஏற்றுமதித் துறைகளை வலுப்படுத்துவதற்குமாக ஏற்றுமதி பன்முகப்படுத்தல்களை நெறிப்படுத்தல்.
- இலங்கை ஏற்றுமதியாளர்களின் சந்தை நுழைவு மற்றும் இணக்கப்பாட்டு இயலளவுகளை வலுப்படுத்தல்.
- ஏற்றுமதியாளர்களுக்கு வசதியளிப்புச் செய்வதற்காக வினைத்திறனான வர்த்தக மற்றும் அனுசரணை இணைப்புக்களாக உருவெடுத்தல்.

முழுமையானதும் நிலையானதுமான வளர்ச்சியை அடைந்து கொள்வதற்காக நாட்டின் தனியார் துறையின் போட்டித்தன்மையை வலுப்படுத்தும் இலங்கையின் பொருளாதார நோக்கிற்கு தேசிய ஏற்றுமதி உபாயம் உதவி புரியும்.இலங்கையின் ஏற்றுமதி உற்பத்திகளின் பன்முகப்படுத்துவதற்கும் வளர்சியடையச் செய்வதற்குமாக பொதுவாக வடிவமைப்புச் செய்வதற்கும் உடன்பட்ட திட்டத்தை நெறிப்படுத்துவதற்குமாக பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை தொழில்முயற்சிகளின் ஆலோசனை செயன்முறை முன்னெடுக்கப்படும் அதன் ஊடாக புதிய இலக்கு சந்தைகளை அடைவதற்கு இலக்கு வைக்கப்படும். எதிர்பார்த்த ஏற்றுமதி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முன்னுரிமைப்படுத்தப்பட்ட ஐந்து வருட துரித செயற்பாடு நோக்கிய வேலைச்சட்டகத்தை அடைந்து கொள்வதற்கு தேசிய ஏற்றுமதி உபாயம் வடிவமைக்கப்படும். பல்வேறு முன்னுரிமைத் துறைகள் தொடர்பாக இது கவனம் செலுத்தும் அத்தோடு பிரதான வர்த்தக ஒத்துழைப்பு தொழிற்பாடுகள், இலங்கையின் ஏற்றுமதி போட்டித்தன்மையின் பண்புசார் மற்றும் தொகை சார் பகுப்பாய்வுக்கான தெரிவு செய்யப்பட்ட அடிப்படை, முன்னுரிமை நோக்கை உறுதிப்படுத்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்தும். தெரிவு செய்யப்பட்ட முன்னுரிமைத் துறைகள் துரிதப்படுத்தப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தியின் புதுப்பிக்கப்பட்ட சுழற்சிக்கு பங்களிப்புச் செய்யும். உரிய அரச மற்றும் தனியார் துறை முகவரகங்களின் ஏற்றுமதி அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்கு தேசிய ஏற்றுமதி உபாயம் திட்டமிடல் கருவியாக சேவை வழங்கும்.

**வர்த்தக ஒத்துழைப்பு தொழிற்பாடுகள்**

முழுமையானதும் ஆலோசனைச் செயன்முறையின் ஊடாக, தேசிய ஏற்றுமதி உபாய நோக்கு மற்றும் உபாயவழிக் குறிக்கோள்கள் மற்றும் தேசிய வியாபார சூழலை மேம்படுத்துவதற்கும் பின்வரும் வர்த்தக ஒத்துழைப்பு தொழிற்பாடுகள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வர்த்தக ஒத்துழைப்புத் தொழிற்பாடுகள் வர்த்தகத்தின் பிரதான நிலைக்குத்து பரிமாணத்தில் இலக்கு வைப்பதுடன் இது இலங்கையின் ஏற்றுமதித் துறையின் முழுமையான போட்டித்தன்மையில் செல்வாக்குச் செலுத்துவதுடன் அவைவாயவன:

- வர்த்தக தகவல் மற்றும் மேம்பாடு
- தேசிய தர உட்கடடமைப்பு
- புத்தாக்கம் மற்றும் ஆர் என்ட் டீ (R & D)
- வசதியளிப்புக்கள்

கலந்துரையாடலைத் தொடர்ந்து, இரண்டாவது ஆலோசனைக் கூட்டம் 2017 யூலை 12 முதல் 20 ஆம் திகதி வரை நடைபெற்றது. தேசிய ஏற்றுமதி உபாய இலக்கு துறைகள், சந்தை விளக்கப்படுத்தல்கள், சவால்கள் மற்றும் வாய்ப்புக்களுக்கான பெறுமதி சங்கிலியின் பகுப்பாய்வு மற்றும் ஏற்றுமதிகளுக்கான விரிவுபடுத்தல் தொடர்பான வரையறுத்த திட்டத்தை கொண்டமைந்ததாக இந்தக் கூட்டத்தின் பிரதான குறிக்கோள் இருந்தது. இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கான தாங்கிக் கொள்ளக் கூடிய வர்த்தக ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் தரத்தினை ஏற்பாடு செய்வதற்குமான பிரதான சவால்களை ரீஎஸ்எப் குழுக்கள் அடையாளம் கண்டுள்ளது. 2017 ஓகஸ்ட் 08 முதல் செத்தெம்பர் 12 ஆம் திகதி வரையான ஆலோசனை அமர்வுகளைத் தொர்ந்து துறைசார் கூட்டங்கள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து, 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் 18 முதல் 22 ஆம் திகதி வரை கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் காலியில் இலங்கையின் தேசிய ஏற்றுமதி உபாய வடிவமைப்பின் ஒரு பகுதியாக பிராந்திய ஆலோசனைகள் நடைபெற்றன. மத்திய, வட மற்றும் தென் மாகாணங்கள் தொடர்பாக இந்த பிராந்திய உசாவுகைகள் கவனம் செலுத்தப்பட்டதுடன் இந்த ஆலோசனையில் நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தான பங்குபற்றுனர்களும் கலந்து கொண்டனர். வாசனைத் திரவியங்கள் மற்றும் சுற்றுலாத் துறையின் நன்மைகள் தொடர்பாக மத்திய மாகாணம் கவனம் செலுத்தியது. தொடர்புடையதும் இப்போது விரைவான சந்தைத் தகவல்களுக்கான சிறிய மற்றும் நடுத்தா தொழிற்துறைகள் பிரவேசத்தை மேம்படுத்தும் தேர்வுகளை கலந்துரையாடுவதற்கான வர்த்தக தகவல் தொழிற்பாடுகள் தொடர்பான விசேட அமர்வொன்று நடைபெற்றது. இத் துறைகள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றமையின் பெறுபேறாக தொழில் உருவாக்கம் முன்னுரிமைத் துறையாக மாத்திரம் இல்லாததுடன், மாறாக, மேலும், இவை அவற்றுடன் இணைந்த துறையாகவும் உள்ளது. கவனத்திற் கொள்ளும் போது, மாகாணங்களில் உள்நாட்டு அக்கறை காட்டுனர்களின் கருத்தானது தேசிய ஏற்றுமதி உபாயத்தை உறுதிப்படுத்துவதற்கு மிக முக்கியமாக இருந்ததுடன் அதன் கவனமானது உண்மையாக தேசிய ரீதியாக முக்கியத்துவமானது.

உள்நாட்டு சவால்கள் மற்றும் வாய்ப்புக்களை கவனத்திற் கொள்கின்ற தேசிய ஏற்றுமதி உபாயமொன்றைக் கொண்டிருப்பதற்கு மாகாண அக்கறை காட்டுனர்களின் உள்ளீடானது மிக முக்கியமாகும். உள்நாட்டு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் எதிர் நாடுகள் மற்றும் தீவின் ஏனைய மாகாணங்களின் எதிர் தரப்பினர்களுடனான வியாபாரங்களுக்கிடையில் மிக முக்கியமான வியாபார இணைப்புக்களை உருவாக்குவதற்கு இது உதவி புரியும். தற்பொழுது, செயற்பாட்டுத் திட்டங்களை வழிமுறைப்படுத்தும் செயன்முறையில் அக்கறை காட்டுனர்கள் இருப்பதுடன் தேசிய ஏற்றுமதி உபாயத்தின் அடிப்படையில் மற்றும் உபாய குறிக்கோள்களின் படி, 2018 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட

வேண்டிய 2018 தேசிய வரவு செலவுத்திட்டத்தில் உயர் முன்னுரிமை ஏற்றுமதி அபிவிருத்தி தலையீடுகள் தொடர்பான பட்டியல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**இலங்கைக்கான ஹாவாட் லோன்ஜ் பேட் - பிரச்சினைகள் முன்வைக்கப்பட்ட தலையீட்டு தழுவல் செயற்திட்டம்.**

சர்வதேச அபிவிருத்திக்கான ஹாவாட் நிலையத்தின் ஒத்துழைப்புடன் ஏ.அ.ச., புதிய மற்றும் முன்னேறிவரும் ஏற்றுமதித் துறைகளை இனங்காண்பதற்கும் துரிதமாக அமுல்படுத்துவதற்குமான செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் முக்கியமான ஏற்றுமதி துறைகளை பகுப்பாய்வு செய்வதற்கும் இலங்கையின் ஏற்றுமதி அளவினை விரிவுபடுத்துவதற்கும் மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை துரிதமாக தீர்த்து புதிய ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வதற்கு இயலுமையைப் பெற்றுக் கொள்ளலுமாகும்.

ஏற்றுமதி துறைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான முன்னெடுப்பொன்றாக வள்ளம் மற்றும் கப்பல் கட்டுமானம், இலத்திரனியல் ( அச்சிட்ட சேகிட் அட்டைகள்), மின்னியல் ( இன்சுயிலேட்டட் வயர்ஸ்) மற்றும் ஒடோ மொபைல் பாகங்கள் ( விசேடமாக வல்கனைஸ்ட் இறப்பர் ஆடிகல்ஸ்) போன்றன அடையாளம் காணப்பட்டதுடன் அவற்றை முன்னேற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்கான பொதுவான தடைகள் / பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட இரண்டு பொதுவான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தொடர்புடைய அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் இரண்டு தீர்மானம் எடுப்போருடனான கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன ( தற்பொழுதுள்ள ஏற்றுமதி அளவினை பன்முகப்படுத்தும் முகமாக ஏற்றுமதி வளர்ச்சியை இயலச் செய்தல் தொடர்பான பரீடச்சிப்புக்கள் மற்றும் ஊழியம்)

தெரிவு செய்யப்பட்ட ஏற்றுமதி உற்பத்தி துறைகள் தொடர்பான பிரச்சினைகளை உறுதிப்படுத்தல் தொடர்பான தீர்மானம் எடுப்போரின் பரீட்சிப்பு மற்றும் வசதியளிப்பு கூட்டத்தின் பெறுபேறோன்றாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை கேட்ப்போர் கூடத்தில் 2017 ஏப்ரல் 03 ஆம் திகதி இலங்கையில் காணப்படுகின்ற வசதியளிப்புக்களை பரீட்ச்சிப்பு செய்தல் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது அத்தோடு இது இறப்பரை அடிப்படையாக் கொண்ட மற்றும் இலத்திரனியல் மற்றும் மின்னியல் உற்பத்திகள் தொடர்பானதாகும்.

மேலும், கருத்தரங்கில் ஆர்வம் காட்டியவர்களுக்கான ஏற்றுமதியாளர் வெளிச் செல்லல் தினமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இத்தினத்தில் இவர்கள் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவக ஆய்வு கூடத்தில் காணப்படும் வசதிகளை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் கண்டியில் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில் சந்தையில் பங்குபற்றுவதற்கு 3 ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு வசதியளிப்புச் செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுதிட்டத்திற்கான ஏற்றுமதி அளவினை பன்முகப்படுத்துவதற்காக மின்னியல் மற்றும் இலத்திரனியல் துறை, இறப்பர் மற்றும் இறப்பர் சார் உற்பத்திகள் மற்றும் ஏனைய உற்பத்தித் துறைகள் போன்ற துறைகளை இலங்கையில் காணப்படுகின்ற வற்றை மேம்படுத்துவதற்கான பரீடச்சிப்பு வசதிகள் விசேடமாக அபிவிருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் சமர்பிக்கப்பட்டன.

பிடிஐஏ செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில், இன்டநெட் ஒப் திங்க்ஸ் (IoT), இலக்ரிகல் பெனல் போட்ஸ் (HS 8537) மற்றும் ஒடோ மொபைல் பாகங்கள் [HS. 8708] போன்ற 3 முக்கிய துறைகள் ஏற்றுமதி அபிவிருத்தி சபை குழுவினால் அடையாளம் காணப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட கம்பனிகள் நேர்காணல் செய்யப்பட்டதுடன் அவர்ளினால் முகங்கொடுக்கப்பட்ட பொதுவான பிரச்சினைகள் தொடர்பாக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட உற்பத்திகள் தொடர்பாக பிட்ச புத்தகங்கள் தயார் செய்யப்பட்டு வெளிநாட்டு தூதரகங்களுக்கு மத்தியில் பகிரப்பட்டன.

**02. ஏற்றுமதி முனைப்பு தொழில்முயற்சி அபிவிருத்தி**

**2000 புதிய ஏற்றுமதியாளர்களை தாபிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் - *# EXPORTCHAMPION* ஆக உருவெடுத்தல்**

2017 – 2022 காலப் பகுதியில் ஏற்றுமதியாளர்களாக உருவெடுப்பதற்கு 2000 புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதவற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2017 இல் ஆரம்பிக்கப்பட்டது. அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் சுப மூகூர்த்தத்தின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. 2022 ஆம ஆண்டில் ஐ.அ.டொ. 27 பில்லியன்கள் அளவான ஏற்றுமதி இலக்கினை அடைவதற்கு ஏற்றுமதி கைத்தொழிலில் முதலீடு செய்வதற்கு உள்நாட்டு தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்தல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக இருக்கின்றது. நிகழ்சித்திட்டத்திற்கு பொருத்தமான மற்றும் ஆர்வம்காட்டுகின்றவர்களை இணைத்துக் கொள்ளுதல் தொடர்பாக தொழில் முயற்சியாளர்களை இனங் காண்பதற்கு இது மிக முக்கியமாகும் அத்தோடு பொது மற்றும் தனியார் துறை தீர்மானம் எடுப்போரின் உதவியுடன் ஏற்றுமதியாளர் என்ற வகையில் அபிவிருத்தி செய்வதற்கு தொழில் முயற்சியாளரின் தேவையை பகுப்பாய்வு செய்தல்.

250 இற்கு மேற்பட்ட தொழில் முயற்சியாளர்களின் பங்குபற்றலுடன் யாழ்ப்பாணத்தில் மாவட்ட செயலக கேட்ப்போர் கூடத்தில் 2017 மார்ச் 23 ஆம் திகதி முதல் நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது. மாகாணத்தில் காணப்படும் மனித மற்றும் பௌதீக வளங்களின் கிடைப்பனவுக்கு எற்ப, ஏற்றுமதிக்கான அபிவிருத்தி தொடர்பாக வட மாகாணத்தில் அதிக வாய்ப்புள்ள துறைகளாக பதப்படுத்தப்பட்ட உணவு, வாழ்க்கை பாணி, மீன்பிடித்துறை மற்றும் ஐசிரி / பீபிஎம் போன்ற துறைகள் இ.ஏ.அ.ச. ஆல் இனங் காணப்பட்டுள்ளது. மேற்படி கருத்தரங்குக்கு இணைவாக ஒரு ஏற்றுமதி உற்பத்தி கண்காட்சி மற்றும் வியாபார மனையும் நடைபெற்றது. வியாபார மனையில் ஏரத்தாள 143 தொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றியதுடன் இந்த வியாபார மனையின் போது ஏறத்தாள 100 பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. தேவைப் பகுப்பாய்வுப் படிவத்தின் ஊடாக தொழில் முயற்சியாளர்கள் பற்றிய தகவல்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அத்தோடு வகைப்படுத்தப்பட்டு அவர்கள் மேலதிக அபிவிருத்திக்காக மூன்று பிரதான வகைகளாக அதாவது எக்ஸ்போட் ரெடி, எக்ஸ்போட் பொடென்சியல் மற்றும் மைக்கிரோ மற்றும் சிறிய என்ற வகையில் வேறுபடுத்தப்பட்டனர். இந்த தொழில் முயற்சியாளர்கள் கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்கு உதவி செய்யப்பட்டு உரிய நிறுவனங்களிடமிருந்து உற்பத்தி பரிசோதனை சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தூண்டப்பட்டனர். மேலும், ஏற்றுமதிச் சந்தைகள் தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்காக புதிய டில்லியில் நடைபெற்ற 1 ஆவது இந்திய பொதுநலவாய நாடுகளின் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களின் வர்த்தக மாநாட்டில் பங்குபற்றுவதற்கு இரண்டு தொழில் முயற்சியாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டன. மேலும், தாய்லாந்தின் ‘‘தாய்பெக்ஸ் வேல்ட் ஒப் பூட் ஏசியா – 2017’’ கண்காட்சியிற்கு இணைவாக தொழல்நுட்ப வெளிப்பாடுகள் மற்றும் இயலளவு கட்டியெழுப்பல் பற்றிய கருத்தரங்கில் பங்குபற்றுவதற்கு இரண்டு எக்ஸ்போட் ரெடி

தொழில்முயற்சியாளர்களுக்கு உதவி செய்யப்பட்டன. 2018 சனவரி இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 9 ஆவது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தையில் வடமாணத்திலிருந்து அடையாளம் காணப்பட்ட 08 சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு தங்களுடைய உற்பத்திகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டன.







250 மேற்பட்ட தொழில் முயற்சியாளர்களுடன் பல்லேகல, மத்திய மாகாண சபை கட்டிடத்தில் 2017 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கண்டியில் இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2017 இல் ஏற்றுமதியாளர்களாக அபிவிருத்தி செய்வதற்கு 25 ஏற்றுமதி ரெடி கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டன. 3 வருட காலப் பகுதியிற்குள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு 106 ஏற்றுமதி ஆர்வம் கொண்ட கம்பனிகள் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்பட்ட தேவைப் பகுப்பாய்விற்கு ஏற்ப உபாயங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. புது டில்லியல் நடைபெற்ற இந்தியாவின் 1 வது பொதுநலவாய சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி பற்றிய வர்த்தக மாநாட்டில் பங்குபற்றுவதற்கு 02 ஏற்றுமதி ரெடி தொழில்முயற்சியாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டன. மேலும், கண்டியில் ஜிஎஸ்பி. பிலஸ் திட்டத்தின் (GSP+) இன் கீழ் பிராந்திய ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்கக் கூடிய நன்மைகள் தொடர்பில் ஒரு விழிப்பூட்டல் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. மத்திய மாகாணத்தின் இரண்டு கம்பனிகள் ஏற்கனவே ஏற்றுமதிகளை ஆரம்பித்துள்ளன.

மேலும், பிராந்திய மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் தொடர்பாக ஏற்றுமதி முறைமை, பொதியிடல் மற்றும் லெபலிடல் பற்றிய விழிப்பூட்டல் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. 2000 புதிய ஏற்றுமதியாளர்களை தாபித்தல் பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட ஐந்து சி.ம.ந.அ. தொழில் முயற்சிகள் தொடர்பாக 14 ஆவது சீன சர்வதேச சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சிகள் சந்தையில் (CISMEF) 2017 பங்குபற்றுவதற்கு விமான பயணக் கட்டணம் மற்றும் விற்பனைக் கூட இட வசதிகளை வழங்குவதன் ஊடாக உதவி செய்யப்பட்டது. 2018 பெப்ருவரி மாதம் 18 – 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.அ.எ.

(UAE), டுபாயின் கல்ப் பூட் மற்றும் பேவரேஜ் கண்காட்சியை தரிசிப்பதற்கு நான்கு தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உதவி**

- தேவைப் பகுப்பாய்வு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட தொழில்முயற்சியாளர்களுடனான நேர்காணல்களை நடாத்துதல்.
- மாதிரி செயற்திட்ட அறிக்கைகள் / சாத்தியவள ஆய்வறிக்கைகளை பகிர்தல்.

- வங்கி நிதியளிப்பு தொடர்பாக வசதியளிப்புச் செய்தல் ( தேவைப்படின்)
- தொழில்நுட்ப மாற்றல் / இயந்திரசாதன மூலமிடல் / பயிற்சி முதலியன.
- உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சந்தை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு வசதியளிப்புச் செய்தல்.

**பெண் தொழில் முயற்சியாளர்கள்**

பெண் தொழில்முயற்சியாளர் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் ஏற்றுமதி வியாபாரத்தில் பெண் தொழில்முயற்சியாளர்களின் உள்ளீர்ப்பை உறுதிப்படுத்ததுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 350 விளக்கத் தகவ்லகளுடன் கூடிய பெண் தொழில் முயற்சியாளர்களின் தரவுத் தளமொன்று ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் நடைபெற்ற இயளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டதில் 100 பெண் தொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றினர்.

3 பெண் தொழில்முயற்சியாளர்களின் பங்குபற்றலுடன் இந்தியா, மும்பாய், உலக வர்த்தக நிலையத்தில் 2017 மார்ச் 27 – 29 ஆம் திகதி வரை 6 ஆவது பூகோள பொருளாதார உச்சிமாநாடு 2017 இல் இலங்கைக்கான மேடையொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான முதலாவது பிரபல்யப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமாக இது இருந்ததோடு இதன்போது சர்வதேச சந்தைகளில் அவர்களுடைய பொருட்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பொன்று வழங்கப்பட்டது. இங்கு 100 கோரிக்கைகள் மற்றும் அதே இடத்தில் ஐ.அ.டொ. 700 பெறுமதியான விற்பனைகளும் நடைபெற்றன.

**ஒரு கிராமம் ஒரு உற்பத்தி**

வட மேல் மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக ஒரு கிராமம் ஒரு உற்பத்தியின் கீழ் நேரடி ஏற்றுமதியாளர்களுடன் நேரடியாக இணைப்புச் செய்யப்பட்டதுடன் விவசாயிகள் குழுக்களை அமைப்பதற்கு வசதியளிப்புச் செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட உற்பத்திகள் ( மிளகு, கருவா, சாதிக்காய், கருவேப்பிலை, முருங்கைக்காய், கொடி தோடை, பசுமை வெட்டு, இஞ்சி, அண்ணாசி) தொடர்பாக விவசாயிகள் குழுக்களின் ஊடாக ஏறக் குறைய 800 ஏக்கர்கள் விவசாயம் செய்யப்பட்டு வருகின்றது. கராம்பு மற்றும் மிளகு உற்பத்திக்கு மத்திய மாகாணத்தில் நூற்றி எழுபத்து ஐந்து ஏக்கர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன அத்தோடு தென் மாகாணத்தில் கொடி தோடை உற்பத்திக்காக 80 ஏக்கர்கள் அடையாளம் காணப்பட்டன. விவசாயிகள் தெரிவு பூர்த்தியடைந்துள்ளதுடன் நாற்றுத் தாவரங்களை வழங்குவதற்கும் வங்கி நிதியளிப்பு வசதியளிப்புக்குமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**03. பூகோள பெறுமதிச் சங்கிலி / பூகோள உற்பத்தி பங்கீட்டு வலையமைப்புக்களுடன் இணைத்தல்.**

**தாய்லாந்து, பெங்கொக்கில் 2017 மே 31 முதல் யூன் 4 ஆம் திகதி வரையான தாய்பெக்ஸ்**

தாய்லாந்தில் 08 சி.ம.ந.அ. தொழில் முயற்சி ஏற்றுமதி ரெடி கம்பனிகளுக்கான விளக்கமளித்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றை ஏற்பாடு செய்தமை. நிகழ்ச்சித்திட்டத்தின் போது, தாய்பெக்ஸ் கண்காட்சி 2017 தரிசிப்பதற்கு பங்குபற்றுனர்களுக்கு இயலுமை கிடைக்கப் பெற்றதுடன், தாய் பொதியிடல் நிலையத்தில் ஒரு நாள் பயிற்சியும் வழங்கப்பட்டது, பெறுமதி சேர்க்கப்பட்ட அரிசி உற்பத்தித் தொழிற்சாலையை தரிசித்தமை, ஈரலிப்பு நீக்கப்பட்ட தக்காளி உற்பத்தித் தொழிற்சாலை, பனையினை அடிப்படையாகக் கொண்ட உணவுகள் மற்றும் குடிபான உற்பத்தித் தொழிற்சாலை ஆகியவற்றை பார்வையிடுவதற்கு முடிந்ததுடன் தாய்லாந்தின் குட் மார்கட்டைப் பார்வையிடுவதற்கும் இயலுமை கிடைத்தது.

தாய்லாந்தில் விவசாயத் துறையில் பயன்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பம் பற்றிய அறிவை பங்குபற்றுனர்கள் பெற்றுக் கொண்டார்கள். விவசாயத் துறையில் பயன்படுத்தப்பட்ட பொருத்தமான விவசாய நுட்பங்களின் பயன்பாடு, தரமான விதைகளின் பயன்பாடு மற்றும் நீர்ப்பாசனம் போன்ற பொருத்தமான தொழில்நுட்பங்களின் காரணமாக தாய்லாந்தில் ஒரு அலகிற்கான விளைச்சல் அதிகரித்துள்ளது. சில பங்குபற்றுனர்கள் தங்களுடைய உற்பத்தி வசதியளிப்புக்களை மேம்படுத்துவதற்கு அறிவினை பெற்றுள்ளதுடன் பங்குபற்றுனர்கள் கள விஜயங்களின் ஊடாக தாங்கள் பெற்ற அறிவின் அடிப்படையில் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஊக்கப்படுத்தபட்டுள்ளனர். இரண்டு பங்குபற்றுனர்கள் கூட்டு முயற்சி தொழில்முயற்சிகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

தாய்பெக்ஸ் கண்காட்சியின் ஊடாக, கண்காட்சியில் காட்ச்சிப்படுத்தப்பட்டிருந்த விளம்பரங்கள், குலுடன் அற்ற, ஹலால், சுகாதாரம் மற்றும் சந்தர்ப்ப உணவுகள், உள்ளடக்கங்கள், கொஸ்கர், உயிரியல், தனியார் லேபல்கள், பழவகைகள் மற்றும் காய்கறி உணவுகள் போன்ற உற்பத்தி / சந்தைப்படுத்தல் போக்குகளை அவதானிப்பதற்கு இலங்கை பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. வித்தியாசமான உணவு பொதியிடல் முறைமைகளை அவதானிப்பதற்கு அவர்களுக்கு இயலுமை கிடைக்கப் பெற்றதுடன் தர உறுதிப்பாடு, உயர்தர உணவு உலர்த்தல் செயன்முறை மற்றும் தாய்லாந்தில் கைத்தொழில் மட்டத்தில் பிரயோகிக்கப்படுகின்ற தரக்கட்டுப்பாட்டு முறைமை பற்றிய பிரயோக அறிவையும் பெற்றுக் கொண்டனர்.

**அலங்கார மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

மலேசிய, இன்போபிஸ் (INFOFISH), ஊடாக இனங்காணப்பட்ட தொழில் தேர்ச்சியாளர்கள், நக்டா உடன் கூட்டாக ரம்பொடகல அலங்கார மீன் உற்பத்தி செய்யும் நிலையத்தில் 2017 நவம்பர் 27- 30 வரை ஒரு விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன் இது கொய் காப், டெட்ராஸ், கெட்பிஸ், ப்லவர்கும் முதலியன தொடர்பான அறிமுகம் செய்யப்பட்ட மீன் உற்பத்தி மற்றும் அலங்கார மீன் போக்குவரத்து தொடர்பான மேம்படுத்தப்பட்ட பொதி செய்யப்பட்ட செயன்முறைகளின் பிரதேசங்களை உள்ளடக்குகின்றது. உயர் பொதியிடல் இடத்துடன் இனப் பெருக்கத்தை குறைத்தல், இந்த நிகழ்சித்திட்டத்தின் மூலம் 80 பங்குபற்றுனர்கள் நன்மை அடைந்தனர்.

**பெங்கொக், தாய்லாந்தில் 22 முதல் 25 ஆம் திகதி வரை ஒடோமொபைல் பாகங்களின் உற்பத்திகள் தொர்பான மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

தாய்லாந்தில் தலைமை அலுவலகத்தைக் கொண்ட ஒடோமொபைல் கம்பனிகளுக்கு ஒடோமொபைல் பாகங்களை விநியோகிப்பதற்கான வாய்ப்புக்களை அடைந்து கொள்ளும் நோககிலும் இலங்கையில் உற்பத்தி வசதிகளை தாபிப்பதற்கும் கூட்டு முயற்சிகளை இனங் கண்டு கொள்வதற்குமாக தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதுவராலயத்தின் உதவியுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, ஒன்பது இலங்கைக் கம்பனிகளுக்காக தாய்லாந்தில் ஒடோமொபைல் பாகங்களின் உற்பத்தித் துறைகளுக்கான முதன் முறையாக மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம், வியாபாரக் கூட்டங்கள், மெடாலெக்ஸ் கண்காட்சியை பார்வையிடல், ஒடோமொபைல் / ஒடோமொபைல் பாகங்ககளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை பார்வையிடுதல் மற்றும் உரிய அமைப்புக்களுடனான மற்றும் நிறுவனங்களுடனான கூட்டங்களையும் உள்ளடக்கும்.

ஒடோமொபைல் பாகங்களின் உற்பத்தியுடன் தொடர்புடைய உலோக வேலைகள் தொடர்பான வியாபார வாய்ப்புக்களை இனங் கண்டுகொள்வதற்கு இலங்கை உற்பத்திகளுக்கான வாய்ப்பொன்றை மெடாலெக்ஸ் கண்காட்சியை பார்வையிட்டமை வாய்ப்பொன்றை உருவாக்கியது.



அதே போன்று, தாய்லாந்தில் தாய் கம்பனியைக் கொண்ட ஒடோமொபைல் கம்பனிகளுக்கான ஒடோமொபைல் பாகங்களை விநியோகிப்பதற்கான வாய்ப்புக்களை இனங் கண்டு கொள்வதற்கும் மற்றும் இலங்கையில் உற்பத்தி வசதிகளை தாபிப்பதற்கும் ஜேவி வாய்ப்புக்களை இனங் கண்டு கொள்வதற்கும் தாய்லாந்து கைத்தொழில் பெடரேசன், தாய் ஒடோமோடில் இன்டஸ்ரீஸ் எசோசியேசன், பெங்கொக் சர்வதேச வர்த்தக மற்றும் கண்காட்சி நிலையத்தின் தாய் ஒடோ பாட்ஸ் மெனுபெக்சரஸ் எசோசியேசன் மற்றும் தாய்லாந்தின் முதலீட்டுச் சபை ஆகிய நிறுவனங்களின் அங்கத்தவர்களுடனான கூட்டங்களை நடாத்துவதற்கு இயலுமை கிடைக்கப் பெற்றன. சுமிட் ஒடோ பொடி இன்டஸ்ரீ, சுமிட் ஒடோ டெக் இன்டஸ்ரி, தாய் ரங் யூனியன் கார் பப்லிக் கொ. லிமிடட் மற்றும் மெசிடெஸ் பென்ஸ் எசெம்ப்லிங் பிலான்ட் முதலியவற்றை பார்வையிடுவற்கான சந்தர்பங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. தாய் ஒடோமொபைல் / ஒடோ மொபைல் பாகங்கள் உற்பத்திக் கைத்தொழில்களைப் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பொன்றை இலங்கை கம்பனிகள் பெற்றுக் கொண்டன. பிரதிநிதிகள் தங்களுடைய உற்பத்தி விபரங்களை சமிட் குழுவின் முகாமைக்கு கையளிப்புச் செய்ததுடன் அவர்களின் மனங்களில் சாதகமான மாற்றமொன்றை உருவாக்கி அவர்களிடமிருந்து சாதமான கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமையும் கிடைத்தது.




கார் ஓடியோ மற்றும் கருவிகள் முதலியவற்றுடன் கூடிய நிலையமொன்றான, பூன்ஸ்சப் மார்கட்டையும் பிரதிநிதிகள் தரிசித்தனர். தாய்லாந்து விற்பனையின் பின்னரான சந்தைக்கு இலங்கையில் ஒடோமொபைல் பாகங்களின் உற்பத்திகளை விநியோகிப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு இந்தச் சந்தையில் களஞ்சிய உரிமையாளர்களை தொடர்புபடுத்திக் கொள்வதற்கான இயலுமையை கம்பனிகள் பெற்றுக் கொண்டன. ஈஸ்டேன் சீபோட் இன்டஸ்ரியல் எஸ்டேடிற்கு பார்வையிடச் சென்றமையானது உலக தரம் வாய்ந்த கைத்தொழில் பேட்டை பற்றிய ஆரம்ப அறிவை பெற்றுக்கொள்வதற்கு பிரதிநிதிகளுக்கு உதவி புரிந்தது. உள்ளக மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களின் நீண்டகால வசதியளிப்புக் கிரயத்தை குறைத்துக்கொள்வதற்கு வாடிக்கையாளர் நலன் தளத் தெரிவு, உலகத் தர வடிவமைப்பு மற்றும் உயர்தர நிர்மாணிப்பு உள்ளடங்கலான மொத்தத் தீர்வுப் பொதி வாய்ப்புக்களை வழங்குகின்றது.

**இறப்பர் துறைக்கான முறைமைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

இறப்பர் மற்றும் இறப்பர் சார் உற்பத்தித் தறை தொடர்பாக தரச் சான்றிதழளித்தலுக்கான முறைமைகள் அபிவிருத்தி நிகழ்சித்திட்டத்தின் கீழ், ஐஎஸ்ஒ 14001 மற்றும் 50001 க்கான இயலளவு கட்டியெழுப்பல் தொடர்பான 2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டதுடன் ஐஎஸ்ஒ 14001 மற்றும் 50001 தொடர்பான ஒரு நாள் கணக்காய்வு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நிறைவு செய்யப்பட்டது. 6 கம்பனிகள் ஐஎஸ்ஒ 14001 மற்றும் 500001 சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டன.

**பாதணி உற்பத்தியாளர்களுக்கான பாதணி பொறியியல் நிகழ்ச்சித்திட்டம்**

சர்வதேச தேர்ச்சி பெற்ற கம்பனியின் சேவையைப் பெற்று உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவற்காக தெரிவு செய்யப்பட்ட பாதணி உற்பத்தியாளர்கள் / ஏற்றுமதியாளர்களுக்கான முதலாவது கட்ட பாதணி பொறியியல் நிகழ்ச்சித்திட்டம் 2017 சனவரியில் ஏற்பாடு செய்யப்பட்டது.

முதலாவது கட்டத்தின் போது, உற்பத்திகள் மற்றும் உற்பத்தி செயன்முறைகளை மேம்படுத்துவதற்கு / உயர்த்துவதற்கு ஆலோசனைகளுடன் பாதணி பொறியியல் பற்றிய அறிவு வழங்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டம், சர்வதேச சந்தைக்குப் பொருந்தும் வகையில் தொழில்நுட்ப ரீதியாக குறிப்பிடப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி மார்க்கத்தை அபிவிருத்தி செய்வதற்கு மேலதிக ஆலோசனைகளை வழங்குவதற்கும் தங்களுடைய உற்பத்திகளின் சர்வசேத தரங்களை அடைந்து கொள்வதற்கு பிரேரிக்கப்பட்ட திருத்தங்களை அமுல்படுத்துவதில் அவர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பங்குபற்றுனர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் இரண்டாம் கட்டம் செப்தெம்பரில் அமுல்படுத்தப்பட்டன.

**சீனாவில் 2017 செப்தெம்பர் 26 முதல் 29 வரையில் தொழில்நுட்ப மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் *(CISMA)***

உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக சந்தையில் காணப்படுகின்ற புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பில் தங்களுடைய அறிவை மேம்படுத்துவற்கான நிகழ்ச்சத்திட்டத்தில் 7 கம்பனிகளைச் சேர்ந்த ஒரே துறைசார் 10 பங்குபற்றுனர்கள் பங்குபற்றினர். பங்குபற்றுனர்கள் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியதுடன் தங்களுடைய கம்பனிகளின் செயலாற்றுகையை மேம்படுத்தக் கூடியதும் கண்காட்சியில் காணப்படுகின்றதுமான புதிய இயந்திரசாதனங்களைக் கொள்வனவு செய்வதற்குபேச்சுவார்த்தைகளும் நடைபெறுகின்றன.

**உற்பத்தி அபிவிருத்தி செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்றுமதியாளர்களின் சொந்த முயற்சிகள்**

கிரய வினைத்திறன் மற்றும் தொழிற்தேர்ச்சியை மேம்படுத்துவதற்கும், பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதி உற்பத்திக் கலவையின் பெறுமதி சேர்ப்புக்களை ஊக்கப்படுத்துவதற்கும் மற்றும் ஏற்றுமதியாளர்களிடமிருந்து உயர் பெறுமதிகளை கைப்பறிக் கொள்வற்குமாக தொழில் நுட்பங்களை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி கைத்தொழில்களை ஊக்கப்படுத்தும் நோக்கில், உற்பத்தி மற்றும் உற்பத்தி செயன்முறைகளின் தரம் / நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கு உற்பத்தியாளர்கள் / தொழிற்சாலை உரிமையாளர்களை ஊக்கப்படுத்தல் தொடர்பாக புதிய திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டது.

தங்களுடைய உற்பத்தி வசதிகளை மேம்படுத்துவதற்கும் சக்தி விரையமற்ற உற்பத்திகளை அறிமுகம் செய்வதற்குமாக ஐந்து ஆடைத் தொழிற்சாலைக் கம்பனிகள், இரண்டு பாதணிக் கம்பனிகள், இரண்டு இலத்திரனியல் கம்பனிகள் மற்றும் ஒரு மென் பொறியியல் கம்பனிகளுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தற்பொழுது தொழிற்படுகின்றது.

**04. இலங்கைப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக பூகோள சந்தை பிரவேசத்தை உருவாக்குதல்.**

### கிரீசில் 2017 செப்தெம்பர் 24 – 28 வரை ஐஎப்ஈஏரி (*IFEAT*) மாநாடு

மாநாட்டில் 02 கம்பனிகளின் பங்குபற்றலுடன் ஏற்பாடு செய்யப்பட்டது. ஐ.அ.டொ. 242,000 பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்கு பங்குபற்றிய கம்பனிகளுக்கு இயலுமை கிடைக்கப் பெற்றதுடன் ஐக்கிய இராச்சியம், யப்பான், ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் ஐ.அ.நாடுகளிலிருந்தான புதிய கொள்வனவாளர்களுடன் வியாபார கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

### கொழும்பில் 2017 பெப்ருவரி 8 முதல் 10 வரையான அலங்கார சர்வதேச மீன் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப மாநாடு

சர்வதேச சந்தையில் நாட்டு வர்த்தகக் குறியை மேம்படுத்துவதற்கு பேச்சாளர்கள் உட்பட 26 வெளிநாட்டு பங்குபற்றுனர்கள் மற்றும் 130 உள்நாட்டு பங்குபற்றுனர்களினால் கொழும்பில் சமூகமளித்து மலேசிய, இன்போபிஸ் இன் ஒத்துழைப்புடன் 2 ஆவது அலங்கார சர்வதேச மீன் வர்த்தக மற்றும் தொழில்நுட்ப மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. ரம்பொடகல மீன் உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையத்தைத் தரிசிப்பதற்கு கள விஜயமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. வரத்தக மற்றும் தொழில்நுட்ப சவால்கள், அபவிருத்தி மற்றும் புத்தாக்கு மீன் உற்பத்தி, அறிவூட்டல் மற்றும் உணவூட்டல் தொழில்நுட்பம்: அதாவது கடல் மற்றும் நன்நீர் அலங்கார மீன் துறை உள்ளடங்கலாக அலங்கார மீன் கைத்தொழில்களின் சகல முக்கியமான நோக்கங்களையும் உள்ளடக்கி, மாநாட்டில் 16 புகழ்பெற்ற சர்வதேச பேச்சாளர்களினால் சொற்பொழிவுகள் மேற்கொள்ளப்பட்டன. நடைமுறை மற்றும் நிலுவையாக உள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், சுற்றாடல் பிரச்சினைகள், சான்றுப்படுத்தல்கள், தவிர்ப்புக்கள் மற்றும் நோய்கள் உள்ளடங்கலான அழுத்தம் கொடுக்கப்படுகின்ற பூகோளப் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன.

### யூ.ஏ.ஈ., டுபாயில் 2017 பெப்ருவரி 26 முதல் மார்ச் 2 ஆம் திகதி வரையான கல்பூட்

உணவு மற்றும் குடிபான துறையின் 23 காட்சிப்படுத்துனர்கள் மற்றும் 2 அவதானிப்பாளர்களின் பங்குபற்றலுடன் யூ.ஏ.ஈ., டுபாயில் 2017 பெப்ருவரி 26 முதல் மார்ச் 2 ஆம் திகதி வரையான கல்பூட் கண்காட்சியில் இலங்கையின் பங்குபற்றுனர்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டது. பொதியிடல் மற்றும் வடிவமைப்பு உள்ளடங்கலான நிகழ்வுகளில் கண்காட்சியாளர்கள் காட்சிப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை கற்றுக் கொண்டனர். விநியோகத்தர்கள் ரஷ்யா மற்றும் கானாவிலிருந்து இனங்காணப்பட்டனர். கடந்த ஆறு மாத காலத்தில் ஐ.அ.டொ. 24.7 மில்லியன்கள் பெறுமதியான கட்டளைகள் நிறைவேற்றப்பட்டதுடன் இது சந்தைச் சங்கிலிக்கு சிவப்பு அரிசி அறிமுகம் செய்யப்பட்டதன் ஊடாக பெறப்பட்டதாகும் அத்தோடு ஐ.அ.டொ. 7.5 மில்லியன்கள் பெறுமதியான கட்டளைகள் தொடர்பாக பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### யப்பான், சிபாவில் மார்ச் 07 முதல் 10 வரையான பூட்டெக்ஸ் (*FOODEX*)

6 தூய தேங்காய் எண்ணை உற்பத்தி ஏற்றுமதியாளர்களின் பங்குபற்றலுடன் மார்ச் 07 முதல் 10 வரை யப்பான், மகுஹரி மெசியில் நடைபெற்ற பூட்டெக்ஸ் கண்காட்சி 2017 இல் இலங்கையின் பங்குபற்றுனர்களினால் யப்பானில் இலங்கை தூதுவராலயத்தின் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்தது. இலங்கை விசிஓ இற்கான இழந்த யப்பான் சந்தையை மீளப் பெற்றுக் கொள்ளும் முகமாக பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டது அத்தோடு இலங்கையர்களிடமிருந்து சிறந்த விசிஓ தொடர்பாக கொள்வனவாளர்களை அறிவூட்டுவதற்குமாகும்.

**பெசெட் 2017**

கைத்தொழில் துறை தொடர்பாக இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களின் 2 ஆவது அணியை கட்டியெழுப்பும் கண்ணோட்டத்தில், பெசெட்ஸ் சிறிலங்கா 2017 இல் எஸ்.எம்.இ. அரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கண்காட்சியில் 15 ஆபரண உற்பத்தியாளர்கள் மற்றும் 8 ஆபரணவ வடிவமைப்பாளர்கள் தங்களுடைய உற்பத்திகளை காட்சிப்படுத்தியுள்ளனர். 2.0 மில்லியன் அளவான உடனடி விற்பனை நடைபெற்றதுடன் 0.6 மில்லியன் பெறுமதியான உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகள் மேற்கொள்ளப்பட்டன. ஐ.அ.நாடுகளுடன் 1.5 மில்லியன் பெறுமியான வியாபாரம் பேச்சு வார்த்தையில் உள்ளன.

**கொழும்பில் 2017 பெப்ருவரி 3 முதல் 5 வரை பாதனி மற்றும் தோல் உற்பத்திச் சந்தை**

| | சாதாரண பங்குகள் | 58,312,483.61 | 58,312,483.62 |
| | (-) பெறுமதி இழப்புக்கான ஏற்பாடு | (124,550,442.39) | (122,822,417.40) |
| | | **38,828,250.00** | **40,548,150.00** |
| **(12)** | **முதலீடுகள்** | | |
| | காகிதாதிகள் | 2,123,332.25 | 1,840,628.54 |
| | | **2,123,332.25** | **1,840,628.54** |
| **(13)** | **வர்த்தக மற்றும் பிற கிடைக்க வேண்டியவைகள்** | | |
| | ஏற்றுமதிக் கடன் | 41,348,001.60 | 45,183,838.60 |
| | ( - ) கடன்களின் தேய்வுக்கான ஏற்பாடு | (41,348,001.60) | (44,176,573.65) |
| | பதவியணிக் கடன்கள் | 40,453,916.07 | 40,813,910.25 |
| | கழி: நிறுத்திவைத்த பதவியணிக் கிரயம் | (556,424.43) | (3,940,875.88) |
| | பெ.சே.வரி கிடைப்பனவுகள் | 104,676,878.80 | 104,676,878.80 |
| | ஏனைய கடன்பட்டோர்கள் | 14,936,142.44 | 15,200,592.43 |
| | | **159,510,512.88** | **157,757,770.55** |
| **(14)** | **முற்பணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்** | | |
| | முற்கொடுப்பனவுகள் | 2,463,069.30 | 4,289,831.97 |
| | முற்பணங்கள் | 13,125,175.77 | 6,350,095.44 |
| | வங்கி உத்தரவாதம் | 300,000.00 | 300,000.00 |
| | சேவைகளுக்கான வைப்புக்கள் | 1,497,260.00 | 1,307,260.00 |
| | மீளளிப்புச் செய்யக் கூடிய பாதுகாப்பு வைப்புக்கள் | 969,390.16 | 969,390.16 |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
**2017 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | SLFRS 31.12.2017 ரூ. சதம் | SLFRS 31.12.2016 ரூ. சதம் |
|---|---|---|
| திருப்பியனுப்பப்பட்ட காசோலைகள் | 114,000 | 140,000.00 |
| முற்செலுத்திய பதவியணி கிரயம் | 556,424.43 | 3,940,875.88 |
| | **19,025,319.66** | **17,297,453.45** |

**(15) காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி – வைப்பு காசாளர் | 2500.00 | 2,500.00 |
| இலங்கை வங்கி – லேக் வீவ்(306605) | - | 32,293,112.53 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 2,535,581.62 | 1,017,863.61 |
| இலங்கை வங்கி - கூட்டாண்மைக் கிளை | 212,229.35 | 227,280.45 |
| டிஎப்சிசி - கூட்டாண்மைக் கிளை | 198,890.00 | 4,998,890.00 |
| சம்பத் வங்கி – கண்டி | 5,181.92 | 4,917.32 |
| சம்பத் வங்கி – காலி | 7,332.63 | 7,086.81 |
| இலங்கை வங்கி – மன்னார் | 2,125.26 | 1,385.45 |
| சம்பத் வங்கி – குருநாகல் | 17,107.67 | 1,716.21 |
| கையில் உள்ள காசு | 71,357.47 | 67,793.82 |
| | **3,052,305.92** | **38,622,546.20** |

**(16) கிடைத்த நன்கொடை – சாதாரண பங்குமுதல் பகிர்வு**

| | | |
|---|---|---|
| அரசாங்க பங்களிப்பு | 7,904,002.00 | 7,904,002.00 |
| யுஎன்டிபி பங்காண்மை | 2,110,282.00 | 2,110,282.00 |
| | **10,014,284.00** | **10,014,284.00** |

**(17) கிடைத்த நன்கொடைகள்**

| | | |
|---|---|---|
| அரச பங்களிப்பு – மோட்டார் வாகனம் | 38,826,450.00 | 38,793,100.00 |
| அரச பங்களிப்பு – பிற | 10,674,134.92 | 5,316,862.51 |
| ஐரீசி பங்களிப்பு | 12,716.35 | 12,716.35 |
| ஏற்றுமதி மேம்பாட்டு செயலகம் | 202,677.32 | 202,677.32 |
| ( - ) அரச நன்கொடைகளின் தேய்வு | (16,669,717.42) | (11,357,367.93) |
| | **33,046,261.17** | **32,967,988.25** |

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
**2017 திசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | SLFRS<br>31.12.2017<br>ரூ. சதம் | SLFRS<br>31.12.2016<br>ரூ. சதம் |
|---|---|---|
| **(18) ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள்** | | |
| கடன் திட்ட பங்களிப்பு | 7,796,197.30 | 7,954,151.81 |
| யுபிஇபிவி | 2,108,251.77 | 2,108,251.77 |
| ஏற்றுமதியாளர் பங்களிப்பு | 1,852,791.00 | 23,712,791.00 |
| யுபிஇபிவி - கட்டுப்பாட்டுக் கணக்கு | (10,403,683.00) | (10,403,683.00) |
| மீளளிப்புச் செய்யவேண்டிய வைப்புக்கள் | 7,670,816.50 | 7,118,316.50 |
| | **9,024,373.57** | **30,489,828.08** |
| **(19) ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு** | | |
| நிலுவை முன்கொண்டு வந்தது | 88,057,017.00 | 93,193,267.00 |
| ஆண்டின் போதான ஏற்பாடுகள் | 12,490,722.80 | 5,211,847.00 |
| ஆண்டின் போது செலுத்தப்பட்டது | (10,565,855.50) | (10,348,097.00) |
| நிலுவை முன்கொண்டு சென்றது | **89,981,884.30** | **88,057,017.00** |
| **(20) ஏனைய கொடுக்க வேண்டியவை** | | |
| செலுத்த வேண்டிய முத்திரை கட்டணம் | 24,575.00 | - |
| கோரப்படாத சம்பளங்கள் | 126,320.36 | 33,422.30 |
| கோரப்படாத பலதரப்பட்ட கொடுப்பனவுகள் | 165,853.70 | 1,338.53 |
| ஈ.பி.எப். சென்மதிகள் | 36,323,276.18 | 33,802,601.95 |
| ஈ.ரீ.எப். சென்மதிகள் | 306,222.56 | 3,741.67 |
| ஊழியர் இறுதி கொடுப்பனவுகள் | 22,605.36 | 33,005.36 |
| செலுத்த வேண்டிய சம்பளங்கள் | 116,522.77 | - |
| செலுத்த வேண்டிய சென்மதிகள் | 1,994,672.00 | 1,294,672.00 |
| மீளச் செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புக்கள் - காசாளர் | 2,500.00 | 2,500.00 |
| விலை மனுக்களுக்கான மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 243,000.00 | 6,000.00 |
| சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 388,340.16 | 162,153.88 |
| பிற அட்டுறு செலவீனங்கள் | 59,530,053.58 | 28,445,923.90 |
| | **99,243,941.67** | **63,785,359.59** |

| | SLFRS | SLFRS |
|---|---|---|
| | **31.12.2017** | **31.12.2016** |
| | **ரூ. சதம்** | **ரூ. சதம்** |
| **(21) வங்கி மேலதிகப்பற்று** | | |
| இலங்கை வங்கி – லேக் வீவ் | 38,226,620.45 | - |
| | **38,226,620.45** | **-** |

**(22)** இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப சாதாரண பங்குகளில் முதலீடுகள் அருகலுக்காக பரீட்சிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2011 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு ரூ. 31,698,150 தொகை அருகல் ஏற்பாட்டின் மீளளிப்பு செய்யப்பட்டது.

**(23) (23.1) பதவியணிக் கடன்**

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் பிரகாரம், ஏதேனும் அருகல் நட்டங்களை கழித்து வினைத்திறன0ான வட்டிச் சதவீதத்தை பயன்படுத்தி அருகல் கிரயத்தில் பதவியணி கடன்கள் அங்கிகரிக்கப்பட்டுள்ளன. அருகல் கியத்தில் 2013 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு பதவியணி கடன்களின் நிலுவைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. அதன் பிரகாரம், முன்செலுத்தப்பட்ட பதவியணிக் கிரயம் ரூ. 16,060,711.67 தொகையான மற்றும் ஐஎப்ஆர்எஸ் கணக்குச் சீராக்கம் அதிகாரசபையின் கணக்கு ஏடுகளில் ஸ்தாபிக்கப்பட்டது.
*பின்வருமாறு நிதிக் கூற்றுக்களில் உரிய நிலுவைகள் காட்டப்பட்டுள்ளன.*

**(23.2)** பதவியணி கடன் கணக்கிலிருந்து ஐஎப்ஆர்எஸ் சீராக்கல் கணக்கு நிலுவை குறைக்கப்பட்டது. அதன் பெறுபேறாக, ஐந்தொகையில் சாதாரண பெறுமதியில் பதவியணி கடன் காட்டப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பதவியணிக் கடன் | ரூ. | 40,453,916.07 |
| ஐஎப்ஆர்எஸ் சீராக்கங்கள் | ரூ. | (556,424.43) |
| | ரூ. | 39,897,491.64 |

**(23.3) நடைமுறைச் சொத்துக்களின் கீழ் மேற்படி சீராக்கங்களின் காரணமாக முன்செலுத்திய பதவியணிக் கிரயம் காட்டப்பட்டுள்ளது.**

| | | |
|---|---|---|
| முன்செலுத்திய பதவியணிக் கிரயம் | **ரூ.** | 556,424.43 |

## (24) முன்னைய வருடச் சீராக்கங்கள்

நிதிக் கூற்றுக்களின் பகுதிகளின் அங்கீகாரம் மற்றும் அளவீடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிழைகள் 2017 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் திருத்தப்பட்டுள்ளன. இருந்த போதும், பிழைகள் ஏற்பட்ட காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்களில் இந்த பிழைகளைத் திருத்தம் செய்தல் நடைமுறைச் சாத்தியமற்றது, ஆகவே நடைமுறையாண்டு நிதிக் கூற்றில் இந்தப் பிழைகள் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

| முன்னைய கால பிழைகளின் தன்மை | பாதிக்கப்பட்ட எப்எஸ்எஸ் நிரல் விடயங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| ஏனைய அட்டுறு செலவீனங்களுக்கான உபரி ஏற்பாடுகளின் மீளளிப்பு | உரிய செலவீனக் கணக்குகள் | 702,151.70 |
| அட்டுறு தேய்மானத்திற்கான ஏற்பாடுகளின் திருத்தம் | தேய்மான செலவினகணக்கு | 493,247.39 |
| பெறுமதி இழுப்பிற்கான ஏற்பாடுகளுக்கான சீராக்கங்கள் | பெறுமதி குறைத்தல் கணக்கிற்கான ஏற்பாடுகள் | (1,719,900.00) |
| பிற (நிகர) | உரிய பேரேட்டுக் கணக்குகள் | (39,543.41) |
| | | (564,044.32) |

## (25) உரிய வகுதியினர்களின் கொடுக்கல்வாங்கல்கள்

கம்பனியானது அதன் இணை நிறுவனங்களான டெவலெப்மென்ட் ஹோல்டிங்ஸ் வரையறுத்த (தனியார்) கம்பனி போன்ற சில குறிப்பிட்ட செயற்பாடுகள் தொடர்பாக சதாரண வியாபாரத்தின் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் உரிய வகுதியினர்களின் கொடுக்கல் வாங்கல்கள் என கருதப்படுகின்றன. அறிக்கையிடல் காலப் பகுதியின் போது, ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் அவ்வாறான தொடர்புடைய வகுதியர்களுக்கு பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

| பெயர் | கொடுக்கல் வாங்கல்கள் | 2017 ரூ. சதம் | 2016 ரூ. சதம் |
|---|---|---|---|
| வரையறுத்த டெவலெப்மென்ட் (தனியார்) கம்பனி | மாதாந்த வாடகை | 60,000,000.00 | 59,598,214.28 |
| | தரிப்பிட கட்டணம் | 394,285,68 | 384,000.03 |
| | கேட்ப்போர் கூட கட்டணங்கள் | 405,303.74 | 438,304.85 |
| | கிடைத்த பங்கிலாபம் | 36,244,971.00 | 36,244,971.00 |

**(26) நிச்சயமற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்**

கீழே குறிப்பிடப்பட்டவை தவிர ஐந்தொகை திகதியில் உள்ளவாறு வேறு ஏந்த நிச்சயமற்ற ஆதனங்களும

| | 31.12.2017 உள்ளவாறு நிச்சயமற்ற ஆதனுங்களின் தன்மை | நிசசயமற்ற ஆதனுங்கள் ஏழுகின்ற தாப்பினரின் பெயர் | சாத்தியமான/ மதிப்பிடப்பட்டக ாசு உட்பாய்ச்சல் ரூ. சதம் | காசு உட்பாய்ச்சலை அளவிட முடியாவிடின் |
|---|---|---|---|---|
| i. | நிலுவையாகவுள்ள வாடகை | PIMA ஹோல்டிங் பிறை | 1,284,515.00 | சட்டமா அதிபர் திணைக்களசட்டணம |
| | | ஜெம் நேசன் பிறைவட் லிமிட்ட | 2,226,596.78 | சட்டமா அதிபர் திணைக்களசட்டணம |
| | | யுனிக் மல்டி ஆடிஸ்ட் | 194,142.50 | - |
| | | சுாரா ஓஸ் லதர் பிறைவேட் லிமி | 2,125,000.00 | - |
| ii. | கடன் தவறுகையாளர்கள் | இன்டர்நெசனல் | 476,973.00 | - |
| | | வேக்ஜ்ஒப் ஆட்ஸ் | 42,000.00 | - |
| | | ராஜாஸ் ஜவல்ரி | 90,418.00 | - |
| | | சிரிமிக் சீ புட்ஸ் | 169,620.00 | - |
| | | சிலோன் ஓனமென்டல் | 299,720.00 | - |
| | | கோகோனட் ஹஸ்ஸ்க் சிப்ஸ் | 44,800.00 | - |
| | | சமன் ஜெம்ஸ் ஏன்ட ஜவலா்ள் | 252,912.02 | - |
| | | யுனிசைக்லிங் கமார்கட்டிங் | 278,455.58 | - |
| | | வேல்ட் பெஷன் | 30,000.00 | - |
| | | யுனிக் மல்டி ஆடிஸ்ட் | 287,006.54 | - |
| iii. | மேலதிக பயண | திருமதி ஏஸ் வீரகோன் | USD 1,598.46 | - |
| iv. | முறி மீள்கொடுப்பனவு | சிறிகுமார | 104,725.45 | - |
| v. | ஏ.அ.ச. இனால் | சொலர் கிரீன் பிலான் டேசன் | 1,505,932.00 | - |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } ரீசீஎம்2/எப்/ஈடீபீ/1/17/17 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2018 நவம்பர் 30

தலைவர்,
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 செப்தெம்பர் 21 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

நியமத்தின் 25 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் துணைக் கம்பனிகளுடன் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களும் விரிவாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், சபை அதன் துணைக் கம்பனிகளான டிவலப்மென்ட் ஹோல்டின் தனியார் கம்பனிக்குச் செலுத்தப்பட்ட ரூபா 617,818 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்கில் வெளிப்படுத்தப்படவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை மற்றும் டிவலப்மென்ட் ஹோல்டின் தனியார் கம்பனியுடன் கைச்சாத்திட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரியதாகச் செலுத்த

வேண்டிய ரூபா 5,937,500 தொகையான வாடகை மற்றும் வாகன நிறுத்தி வைத்தல் வாடகையான ரூபா 120,108 என்பன கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திஸ்ஸமஹாறாம ஏற்றுமதி உற்பத்திக் கிராம கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 2,493,310 தொகையான கடன் பணத்திற்காக அறவிடவேண்டிய ரூபா 2,793,599 தொகையான வட்டி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் தனியார் கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 3,000,000 ஆக இருந்த போதிலும், நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சுச் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட தலைவரின் 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதிய ஈடீபீ/ஆர்டீடீ/ஆர்1/எம்ஜஎஸ்/022 ஆம் இலக்க கடிதத்தில் பதிவழிப்பதற்கு கோரப்பட்ட கடிதத்தின் பிரகாரம் முதலீட்டுத் தொகை ரூபா 2,948,731 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் தனியார் கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்ட முதலீடாக பேரேட்டில் ரூபா 598,457 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், முதலீடு குறைத்து ஒதுக்கப் பதிவேட்டில் அது ரூபா 3,598,457 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 3,000,000 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

இரத்மலானை களஞ்சியத்திற்குரிய ரூபா 877,303 பெறுமதியுடைய வாடகை உடன்படிக்கை மற்றும் மதிப்பீட்டு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பந்தி | ஒரு காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் வரிசை அமைச்சிற்கும், பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5.2.5 ஆம் பந்தி | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரதியொன்று அடுத்து வரும் ஆண்டு ஆரம்பமாவதற்கு 15 தினங்களுக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச்சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | சாதாரண நடைமுறைகளுக்குப் புறம்பாக மிகையூதியப்படி செலுத்துவதற்காக திறைசேரியின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்காக கம்பனி தொடர்பாக புறம்பாகச் செலுத்தப்பட்ட ரூபா 2,560,467 தொகையான மிகையூதியப் படிக்காக அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரப்பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

சபையினால் தனது பிரதான அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற நவம் மாவத்தையில் 05 மாடிகளுடைய கட்டிடத்திற்காக 2016 மார்ச் 15 ஆந் திகதி முதல் 2017 மார்ச் 14 ஆந் திகதி வரை தனியார் கம்பனியொன்றுடன் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் 2017 மார்ச் 15 முதல் 2017 ஒக்தோபர் 26 வரை உடன்படிக்கையின்றி ரூபா 37,150,685 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 20,282,474 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 45,773,906 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 66,056,380 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் மானியம் ரூபா 11,806,660 இனால் குறைவடைந்ததுடன் நிர்வாகச் செலவினம் ரூபா 34,209,711 இனாலும், ஏற்றுமதி அபிவிருத்திச் செலவினம் ரூபா 19,343,743 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் வீழ்ச்சிக்காக பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக தேறிய இலாபம் ஏற்பட்டிருந்ததுடன், அது வருடாந்தம் தளம்பலடைந்து மீளாய்வாண்டின் போது தேறிய நட்டத்தைப் பெற்றிருந்தது. எனினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைச் சீராக்கும் போது, 2013 ஆம் ஆண்டில் ரூபா 287,157,318 தொகையான பங்களிப்பு அதன் பின்னைய ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பங்களிப்பு ரூபா 197,541,947 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு செயற்பாடுகளும் ஆரம்பிப்பதற்கும், முடிவடைவதற்கும் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதி என்பவற்றைக் குறிப்பிட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பௌதீக அளவுகளைக் காண்பித்து செயலாற்றல் அறிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் சபையின் செயல்முன்னேற்றத்தை ஒப்பீட்டு ரீதியில் பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம், உரிய ஆண்டில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு என்பவற்றை உள்ளடக்கிய மனித வள அபிவிருத்தித்திட்டம் சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 12 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு பூரணப்படுத்தப்படாமையினால் ரூபா 12,460,000 தொகை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஈ) பாதீட்டில் குறிப்பிடப்பட்ட 10 செயற்பாடுகளுக்காக ரூபா 24,400,000 தொகையான நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் அதனை விஞ்சி ரூபா 13,900,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(உ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த Participation at ICA Congress - 2017 மற்றும் Co- organaized Jewels Talk conference என்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின்போது ரூபா 900,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) 2016 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அமுல்படுத்தப்படாதிருந்த ரூபா 8,900,000 தொகையான நிதிஏற்பாடு செய்யப்பட்ட 11 நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படாத ரூபா 7,300,000 தொகை ஒதுக்கப்பட்ட 09 நிகழ்ச்சித்திட்டங்கள் அடுத்து வரும் வருடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக செயலாற்றல் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீன் உற்பத்தி தொடர்பாக சர்வதேச வாடிக்கையாளர்களை கண்டறியும் நோக்கில் 2017 ஏப்ரல் 25 முதல் 27 வரை பெல்ஜியம் இல் நடாத்தப்பட்ட SEAFOOD EXPO GLOBAL சந்தைக் கண்காட்சிக்காக விண்ணப்பிக்குமாறு கோரி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை சபையினால் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கி நிதி அனுசரணை குறிப்பிடப்படாமையினால் கண்காட்சிக்கு விண்ணப்பிக்கும் ஏற்றுமதியாளர்களின் ஆர்வம் குறைவடைந்திருந்தது. மேலும் சபையினால் ஒரு சந்தைக் கண்காட்சிக்காக ஒரு கம்பனிக்கு 03 சந்தர்ப்பங்கிளன் போது மாத்திரம் அனுசரணை வழங்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது இந்த கண்காட்சிக்கு பங்குபற்றிய 03 ஏற்றுமதிக் கம்பனிக்கு அதற்கு முன்னர் 05 சந்தர்ப்பங்களிலும், மேலும் 02 ஏற்றுமதி கம்பனிகளுக்கு 04 சந்தர்ப்பங்களிலும் நிதி அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. இந்த கண்காட்சிக்கு பங்குபற்றி நிதி அனுசரணை பெற்றிருந்த ஒரு கம்பனி 2015 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதி செய்யாதிருந்ததுடன் சந்தைக் கணக்காட்சியின் பின்னரும் ஏற்றுமதிகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஏ) சர்வதேச சந்தையில் இலங்கையின் இறப்பர் சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு 2017 சனவரி 19 ஆந் திகதி முதல் 21 ஆந் திகதி வரையான காலத்தில் இந்தியாவில் நடைபெற்ற INDIA RUBBER EXPO சந்தைக் கண்காட்சிக்கு ஏற்றுமதியாளர்களைத் தெரிவு செய்யும் போது அதிக ஏற்றுமதி வருமானத்தை உழைக்கின்ற நிதிக் கஷ்டங்களின்றிய கம்பனிகளுக்காக அதிக புள்ளியும், குறைந்த ஏற்றுமதி வருமானத்தை உழைக்கும் கம்பனிகளுக்காக குறைந்த புள்ளியும் வழங்கி ஏற்றுமதி மேம்படுத்தலுக்காக நிதி உதவி வழங்குதல் மேற்கொள்ளப்பட்டமையால் நிதிக்கஷ்டங்கள் காணப்படுகின்ற ஏற்றுமதியாளர்களை கட்டியெழுப்புவதல் மற்றும் ஊக்குவிப்பு பணிகள் என்பன உரிய முறையில் மேற்கொண்டிருக்கவில்லை. இந்தக் கண்காட்சிக்கு பங்குபற்றிய 06

ஏற்றுமதியாளர்களில் 03 ஏற்றுமதியாளர்களும் ஒரு தொகுதிக்குரிய ஏற்றுமதியாளர்களாக இருந்ததுடன் அந்த தொகுதிக்காக சபையினால் ரூபா 527,100 தொகையான நிதி அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. இதனால் ஏனைய ஏற்றுமதியாளர்களுக்கு உள்ள சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் 35 தனியார் கம்பனியின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 58,312,484 தொகை மற்றும் 29 கம்பனிகளின் முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 105,066,208 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த முதலீடுகளிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 17,315,000 தொகை முதலீடு செய்யப்பட்ட 03 கம்பனிகள் 2002, 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கலைக்கப்பட்டிருந்ததுடன் கலைப்பாளரால் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட பணத்தை மீளச் செலுத்துவதற்கு சொத்துக்கள் இல்லாதிருந்ததாக காண்பிக்கப்படுகின்றது. மேலும், கம்பனிப்பதிவு பெயர் பதிவேட்டில் பதிவழிக்கப்பட்ட 25 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 46,323,648 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. சபையினால் முதலீடுகளை காலரீதியில் மீளாய்வு செய்து ஏற்படக்கூடிய மூலதன நட்டத்தைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாய ஏற்றுமதி வலயத்தில் 50 விவசாய ஏற்றுமதி முன்னுரிமை செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2009 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 500 மில்லியன் செயற்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை வீரவிலயில் 18 ஏக்கர் காணிப் பிரதேசத்தில் மரக்கறி மற்றும் பழவகைகளை பயிரிடுவதற்காக தனியார் கம்பனியொன்றுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட விவசாய செயற்திட்டம் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) கம்பனிக்கு 1998 சனவரி 01 ஆந் திகதி முதல் 2002 திசெம்பர் 24 ஆந் திகதி வரை சபையினால் ரூபா 2,493,310 தொகையொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 யூலை வரையிலும், அந்தத் தொகை மற்றும் அதற்குரிய வட்டி என்பன அறவிடப்படாதிருந்ததுடன், சபையினதும் அக்கம்பனியினதும் நிதிக்கூற்றுக்களில் அது பெறவேண்டிய / செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 நவம்பர் 27 ஆந் திகதி இருதரப்பினருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 8,000,000 ஆக இருந்ததுடன், 10 வருடங்களில் 03 கட்டங்களின் கீழ் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், முதலாவது கட்டத்திற்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 3,857,360 தொகை திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளருக்கு 2009 நவம்பர் 26 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், கம்பனியினால் அதில் ரூபா 2,043,890 தொகை 09 மாத காலம் செலவிடப்படாமல் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

(iii) இந்த செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கம் விவசாய ஏற்றுமதி வலயத்தில் கருவா, இஞ்சி மற்றும் வெனிலா போன்ற சிறு ஏற்றுமதி பயிர்களை உயர்தரத்தின் கீழ் அபிவிருத்தி செய்து ஏற்றுமதி வியாபாரத்திற்குத் தொடர்புபடுத்துவதற்காக இருந்த போதிலும், நோக்கங்களுக்கு முரணாக ரூபா 1,400,000 செலவில் 2,000 மாங்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டு 15 ஏக்கர்களில் 500 மாங்கன்றுகள் மாத்திரம் பயிரிடப்பட்டு எஞ்சிய 1,500 மாங்கன்றுகளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. மேலும், 52,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 1,000 வாழைக் கன்றுகளும் வறட்சியினால் அழிவடைந்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iv) ஏற்றுமதி முன்னுரிமை விவசாய செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டத்திலிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உழைக்கப்பட்ட ரூபா 7,793,864 தொகையான மொத்த வருமானத்தில் ஏற்றுமதி வருமானம் ரூபா 2,338,160 மாத்திரமாக இருந்தது. மேலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஏற்றுமதிகள் இடம்பெறாமையின் அடிப்படையில், மாங்கன்றுகள் பெற்ற நலனாளிகளுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்கள் பெற்றுக்கொள்வதற்கு சபை உதவி வழங்காமையினால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(v) இந்த விவசாய ஏற்றுமதி வலயத்தில் மாகாண மட்டத்தில் விவசாய உற்பத்திகளை சேகரித்தல் மற்றும் அவற்றை ஏற்றுமதி மட்டத்திற்கு முன்னேற்றும் நோக்கில் தயாரித்தல் மற்றும் பொதியிடல் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கும் அதற்குத் தேவையான தளபாடப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் ரூபா 24,120,000 தொகை சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 2015 யூலை 28 ஆந் திகதி வரையில் ரூபா 18,590,296 தொகை செலவில் நிர்மாணங்கள் இடம்பெற்றிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு வரையிலும் அந்த நிலையத்தில் எந்தவொரு பொதியிடலோ அல்லது தயாரித்தல் நடவடிக்கைகளோ இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பரவலடையும் ஏற்றுமதி சந்தை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக பங்குபற்றலைக் காண்பிக்கும் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்டத்திற்குரிய விண்ணப்பங்களின் மதிப்பீடு 05 பேர்களையுடைய மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 05 சந்தர்ப்பங்களின் போது அங்கீகரிக்கப்பட்ட அளவை விட குறைவான அங்கத்தவர் தரப்பொன்று மதிப்பீட்டு நடவடிக்கைகளைச் செய்திருந்தது.

(ii) வழிகாட்டியின் பிரகாரம் விண்ணப்பதாரர்களால் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய செலவினங்களை மீளளிப்புச் செய்வதற்கு முன்னர் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் சபையின் அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையினால் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய ஏற்றுமதியாளர்களின் செலவினங்கள் மீளளிப்புச் செய்யப்பட்டதன் பின்னர் அவரால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனை அல்லது அடையப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயல்முன்னேற்றம் தொடர்பாக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் செயல்முன்னேற்ற மதிப்பீடு சரியான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 03 கண்காட்சிகளுக்காக உரிய ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையினை விட கூட்டுமொத்தமாக ரூபா 2,676,342 மேலதிகமாக அறிவிடப்பட்டிருந்ததுடன் அந்த பணம் தொடர்பாக செயற்படுகின்ற முறை தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படவில்லை.

## 4.4 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக சபையின் உதவிப் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் என வரிசை அமைச்சிற்கு முறையே 2017 மார்ச் 13 மற்றும் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதிகளில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளுக்காக ரூபா 817,898 தொகை 2017 திசெம்பர் 31 வரையில் சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குரிய டபள்கெப் வண்டி 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 22 ஆந் திகதி வரை வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காலப்பகுதிக்காக சபையினால் ரூபா 128,515 தொகையொன்று பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புக்காக செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 282 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 249 ஆனமையால் 36 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த வெற்றிடங்களால் சபையின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உரிய பதவிகளை இனங்கண்டு அந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்திருக்கும் வகையில் சபையினால் தமது விடயப்பரப்பிற்கு இணங்க அடைய வேண்டிய நோக்கமான நிலைபேறான அபிவிருத்தி நோக்க அதிகாரத்தைக் கையளித்தல், ஆண், பெண் சமத்துவத்தை அடைதல், நிலைபேறானகைத் தொழில் மயமாக்கல் மற்றும் புதியவைகளுக்காக ஊக்குவிப்பை வழங்குதல் என்பன இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதன் விடயப்பரப்பிற்கு கொண்டுவரப்படும் ஏனைய நோக்கமான நிலைபேறான நிதிசார் அபிவிருத்திக்கான பூகோள தொடர்பை வலுப்படுத்தும் செயற்பாட்டினை மேலோங்கச் செய்யும் நோக்கத்தில் அடங்கிய (17 ஆவது நோக்கம்) ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு வியாபாரத்தை கட்டியெழுப்பும் இலக்கை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அதற்காக தொடர்புபடுகின்ற இலக்கு, அடிப்படைத் தரவுகள், இலக்கை அடையக்கூடிய கட்டங்கள், அதன் செயல்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சபையின் வருடாந்த திட்டத்தில் அந்த பணிகளை உள்ளடக்கி தேவையான நிதிஏற்பாடுகளும் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 05 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 15 அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதில் 02 அறிக்கைகளுக்காக முகாமைத்துவத்தால் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஏற்றுமதி மேம்படுத்தல் உத்தியோகத்தராக சேர்க்கப்பட்ட ஒரு பெண் உத்தியோகத்தர் 2017 சனவரி 02 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார்.

## 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகம்

### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.19(ஆ) பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கை, பிரதான பெறுகைத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டு காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2(ஆ) பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு பெறுகைச் செயற்பாடுகளினதும் ஆரம்ப சந்தர்ப்பம் முதல் இறுதிவரையிலும் படிமுறையாகவும் ஒழுங்குமுறையாகவும் விபரங்களைப் பெற்று பெறுகை கால அட்டவணையொன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) Seafood Expo Global சந்தைக் கண்காட்சியில் வியாபாரக் கூடாரங்களை நிர்மாணிப்பதற்காக கூறுவிலை சமர்ப்பித்த 07 நிறுவனங்களில் ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் வியாபார கொட்டகையில் வடிவமைப்பு ரீதியில் சரிந்து காணப்பட்ட குறைபாட்டை கலந்துரையாடல் மட்டத்தில் தீர்வு காண்பதற்கு முடியுமாக இருந்த போதும் அந்த விலை நிராகரிக்கப்பட்டு ஆகக்குறைந்த விலையினை விட யூரோ 10,516 தொகையான அதிக பெறுமதியில் கூறுவிலை சமர்ப்பித்த இரண்டாவது விலை சமர்ப்பித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் திருத்தப்பட்ட பாதீட்டையும் உள்ளபடியான செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது 03 விடயங்களில் 47 சதவீதம் முதல் 3,400 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.4 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கடந்த கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதும் போதியளவான கவனம் செலுத்தப்படாத கணக்காய்வுப் பந்திகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | பந்தி இலக்கம் | கணக்காய்வுப் பந்தி |
|---|---|---|
| 2016 | 2.4(ஆ) | விமானம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சகல பிரயாணங்களிலும் சிக்கன வகுப்பை பயன்படுத்த வேண்டிய போதிலும், சபையின் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளரினால் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக வியாபார வகுப்பில் பிரயாணப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,886,350 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| | 2.4(எ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ 5 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாக சபையில் 25 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு தங்கப்பவுண் வழங்குவதற்காக 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 478,002 செலவிடப்பட்டிருந்த போதிலும், தமது ஊழியர்களுக்குச் நலன்களைச் செலுத்துவதற்காக திறைசேரி நிதியேற்பாட்டைப் பயன்படுத்தும் போது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | 4.6(இ)(ii) | உதவிப் பணிப்பாளர் பதவிக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் 2016 ஆகஸ்ட் 21 ஆந் திகதி நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 05 வெளிவாரி விண்ணப்பதாரர்களும் 04 உள்ளக விண்ணப்பதாரர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்தப் பரீட்சையின் ஆங்கிலப் பாடத்திற்காக வழங்கப்பட்ட காலம் போதியளவாக இல்லாததென குறிப்பிட்டு உள்ளக விண்ணப்பதாரர்கள் மேற்கொண்ட கோரிக்கையின் பிரகாரம் ஆங்கிலப் பாடத்திற்காக மாத்திரம் மீண்டும் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது. |

2.4(அ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புப் பணத்தை கணிப்பீடு செய்யும் போது விசேட படிகள், தொழில்சார் படிகள், உள்ளகப் படிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத விசேட வாழ்க்கைச் செலவுப் படிகளை உள்ளடக்குதல் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படிகளை உள்ளடக்காமையின் அடிப்படையில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 2012 முதல் 2015 ஆம் வரையான காலப்பகுதியில் சபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 5,508,199 தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 659,375 தொகை என்பன மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

4.2(அ) பதவியணியினரை ஆட்சேர்த்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கும்போது உரிய தகவல்கள் உள்ளடக்கப்படாமை மற்றும் காலரீதியில் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ஒரு விடயத்திற்காக பத்திரிகை அறிவித்தல் 02 முறை பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது முதலாவது பத்திரிகை அறிவித்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 698,140 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

4.3 கருவா உற்பத்தியாளர்களை பயிற்றுவிக்கும் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 26,373,010 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையத்திலிருந்து ஏற்றுமதி அளவின் மேம்பாட்டிற்கு பங்களிப்பொன்று 2017 யூன் 28 ஆம் திகதி வரையிலும் கிடைக்காமையினால் இந்த நிலையத்திற்கு செலவிடப்பட்ட செலவினம் ஆக்கபூர்வமாக இருக்கவில்லை.

2015 2.3(அ) கிராமிய பொருளாதார புனர்வாழ்வளிப்பு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 5,000,000 தொகை கடன் தொகையில் ரூபா 2,891,748 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

2.4(அ) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 23(I) பிரிவிற்கு முரணாக நியமிக்கப்பட்ட

சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,076,773 தொகையும், கடமை மற்றும் தனிப்பட்ட பயணங்களுக்காக வழங்கப்பட்ட வாகன வாடகையான ரூபா 6,270,670 தொகையும், வெளிநாட்டுப் பிரயாணிகளுக்கான படிகள் மற்றும் பிரயாணக் கட்டணங்களுக்காக ரூபா 2,122,770 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 12,470,213 தொகை முறையான அதிகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

2.5(அ) 1979 இன் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 2(1) இன் பிரகாரம் சனாதிபதியின் தலைமைத்துவம், வணிக கப்பல் நடவடிக்கைகள், கைத்தொழில், விவசாய கைத்தொழில், மீன்பிடி, நிதி, வெளிவிவகாரம், திட்டமிடல் மற்றும் கிராமியக் கைத்தொழில் என்பவற்றுக்கான விடயப் பொறுப்பு அமைச்சரை உள்ளடக்கிய தேசிய அபிவிருத்தி சபையொன்று தாபிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அதிகாரச்சட்டத்தின் 13(1),(2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் இலக்குகளை அமுல்படுத்தும் போதும், நிறைவேற்றும் போதும், சபைக்கு செலவிட வேண்டி ஏற்படுகின்ற ஏதாவது செலவினமொன்றை தீர்ப்பதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி நிதியமொன்று தாபிக்கப்பட வேண்டும்.

1992 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான 23 வருட காலப்பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தையும் கொள்கைகளையும் அமுல்படுத்துவதற்கான தேசிய அபிவிருத்தி சபை கூடாதிருந்ததுடன் ஏற்றுமதி அபிவிருத்தி நிதியமும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

2.5(ஓ)(i) 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாக கடந்த 04 வருட காலத்தில் தொழில்சார் படியாக ரூபா 2,182,894 தொகையும், விசேட வாழ்க்கைச் செலவுப் படியாக ரூபா

18,284,887 தொகை மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக ரூபா 12,458,798 தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| | 4.2(ஆ)(iv) | அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் ரூபா 5,040,000 தொகையொன்று எக்ஸ்போ இலங்கை தினத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த போது சபையின் தலைவர் மற்றும் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் என்போர் அந்த தினத்திற்காக பங்குபற்றுவதற்கு ரூபா 1,079,688 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| | 4.2(ஆ)(vi) | எக்ஸ்போ கணக்காட்சிக்கு நியமிக்கப்பட்ட சபையின் உத்தியோகத்தர்களுக்கு 2015 மே 15 ஆந் திகதிய MF01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 0(டீ) பிரிவிற்கு முரணாக வெளிநாட்டுப் பிரயாணப் படியாக ரூபா 3,770,640 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | 4.2(ஈ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு, 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக அங்கீகாரமின்றி ஊழியர் கடன் நிதியமொன்று தாபிப்பதற்கும் அதற்கு மாதாந்தம் 7.2 சதவீத வட்டியை செலவு வைப்பதற்கும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரசாங்கத்தின் மானியம் ரூபா 2,567,531 தொகை பயன்படுத்தப்பட்டுமிருந்தது. |
| | 4.6 | 2015 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் கண்டறியப்பட்ட நட்டம் ரூபா 1,918,314 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எந்த செயல்நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 4.5(இ) | 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரங்களுக்கும் நோக்கங்களுக்கும் முரணாக 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,520,848 செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | 2.5(அ)(ii) | 1979 இன் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12(ட) பிரிவின் படி சபை 1988 முதல் தனியார் கம்பனிகளில் முதலீடு செய்திருந்த ரூபா 929,548,150 தொடர்பாக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. |
| | 4.9 | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக சபைக்குச் சொந்தமான 5 வாகனங்களும், 4 உத்தியோகத்தர்களும் வரிசை அமைச்சில் சேவையில் ஈடுபடுத்தி 2014 ஆம் ஆண்டில் வாகனப் பராமரிப்புச் செலவினம், பதவியணியினர் சம்பளம் மற்றும் படி என ரூபா 2,824,256 தொகை சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| 2013 | 2.2.5(அ) | ஜாதிக சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு வழங்க வேண்டியதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 1,009,740 அவ்வலுவலகத்தால் உறுதி செய்யப்படாதும் முறையான அங்கீகாரம் இல்லாதும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| | 4.2(ஊ) | இந்தியாவில், சென்னை நகரில் 2004 முதல் 2009 வரையான காலப்பகுதியின் போது சபை நடாத்திய இலங்கை வர்த்தக நிலையத்தின் 5 விற்பனைக் கூடங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை நிலுவையும் மின் கட்டணமும் ஆகிய ரூபா 7,049,858 தொகையிலிருந்து ரூபா 3,084,693 தொகையொன்று 2018 ஆகஸ்ட் 15 திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | (i) நிதி முதலீடு தொடர்பாக உரிய அங்கீகாரம் பெறப்படாமை மற்றும் பின்தொடர் நடவடிக்கையின்மை |
| | | (ii) ஏற்றுமதிக் கம்பனிகளுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடன் மற்றும் வட்டியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) | விசேட செயற்திட்டக் கட்டுப்பாடு | சபையினால் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இலக்கிடப்பட்ட நோக்கங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்டமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் சேவையில் சேர்ந்து 03 வருடங்களுக்குள் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை நடாத்தப்படாமை மற்றும் குறித்த பாடத்தொகுதிக்கு பதிலாக ஒரு பாடம் மாத்திரம் பரீட்சைக்கு உள்ளடக்கப்பட்டமை. |

எச்.எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி